பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 27 செவ்வாய்க்கிழமை 11.03.2025 கதிர் 123

## இனி இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் யாழ். தேர்தல் தொகுதியில் மட்டுமே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக சரவணபவன் மற்றும் சந்திரகுமார் ☞2

# பெண்கள் மீதான வன்முறையை முடிவுக்கு கொண்டுவரவேண்டும்

## சட்டங்களை இயற்றுங்கள் என்கிறது மனித உரிமைகள் ஆணைக்குழு

பெண்களுக்கு எதிரான சகலவிதமான வன்முறைகளையும் முடிவுக்குக் கொண்டுவருவதுடன், அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு ஆளும்தரப்புநடவடிக்கைஎடுக்கவேண்டும் எனவும், அதனை இலக்காகக்கொண்ட சட்ட, கொள்கை மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச மகளிர் தினத்தை அடுத்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

உலகில்பெண்களின்அடைவுகள்,சமூக முன்னேற்றத்தில் அவர்களது பங்களிப்பு, பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் அவற்றிலிருந்து மீண்டெழும் ஆற்றல் மற்றும் சமத்துவத்துக்கான அவர்களது தொடர் போராட்டம் என்பவற்றுக்கான அங்கீகாரத்தை வழங்கும் நோக்கில் வருடாந்தம் மார்ச் மாதம் 8 ஆம் திகதி மகளிர் தினம் அனுட்டிக்கப்படுகின்றது.

இவற்றில் எத்தகைய முன்னேற்றங்கள் அடையப்பட்டாலும், பாலின சமத்துவம் என்பது இன்னமும் முழுமையாக எட்டப்படவில்லை. பெரும் எண்ணிக்கையான பெண்கள் ☞9

# தேசபந்துவைத் தேட 6 பொலிஸ் குழுக்கள்

முன்னாள் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோனை கைது செய்வதற்காக 06 பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி மாத்தறை பெலேன பகுதியிலுள்ள ஹோட்டலொன்றுக்கு முன்பாக இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்படும்விசாரணைகளுக்குஅமைய முன்னாள் பொலிஸ் மாஅதிபர் தேஷபந்து தென்னகோனை ☞8

# மன்னார், பூநகரி சபைகளுக்கு 24 முதல் 27 வரை வேட்புமனு

## இன்று முதல் கட்டுப்பணம் செலுத்தலாம்

மன்னார், பூநகரி மற்றும் தெஹியத்தகண்டியபிரதேசசபைகளுக்கான வேட்புமனுக்கள் இம்மாதம் 24ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்றும், இன்று முதல் கட்டுப்பணத்தை செலுத்த முடியும் என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. ☞8

# ரணிலுக்கு எதிரான வழக்கிலிருந்து நீதியரசர் திடீர் விலகல்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உள்ளிட்டோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரிக்கும்மூவர் அடங்கிய உயர்நீதிமன்ற அமர்வில் உறுப்பினராக உள்ள நீதியரசர் மேனகா விஜேசுந்தர, நேற்று வழக்கு விசாரணையிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

ரணிலின் ஆட்சிக் காலத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில்நீதிபதிகள்வெற்றிடங்கள்காணப்பட்டபோது அவற்றை நிரப்ப நடவடிக்கை எடுக்காததன் மூலம் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்கக் கோரி, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உள்ளிட்டோருக்கு எதிராக குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு நேற்று விசாரணைக்காக ஜனக் ☞8

## உள்ளாட்சி தேர்தலில் சேர்ந்து போட்டியிட

# தமிழ் அரசுக் கட்சி கதவுகள் இன்னும் திறந்தே உள்ளன

## செயலாளர் சுமந்திரன் நேற்று அறிவிப்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சேர்ந்து- போட்டியிட யாராவது முன்வந்தால்தமிழ்அரசுக்கட்சியின் கதவுகள் திறந்தே இருக்கின்றன என்றுகட்சியின்பொதுச்செயலாளர் சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபைக்கான வேட்பாளர் தெரிவு தொடர்பான கூட்டம்நேற்றுகட்சியின்தலைமை அலுவலகத்தில் யாழ்ப்பாணம் தொகுதிக்கிளைஉறுப்பினர்களுடன் ☞2



# பட்டலந்த சித்திரவதை முகாம் குறித்து விசாரணை நடத்துக

## சிஐடியிடம் நேற்று முறைப்பாடு

பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பில் உரிய விசாரணைகளைமுன்னெடுக்குமாறுவலியுறுத்திகுற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் வீண்விரயத்துக்கு எதிரான பிரஜைகள் அமைப்பினால் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதுடன் இது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அல்ஜசீரா செய்தி சேவைக்கு வழங்கப்பட்ட நேர்காணல் மற்றும் அதில் முக்கியமாக பேசப்பட்ட பட்டலந்த விவகாரமும் தற்போது நாட்டில் முக்கிய பேசுபொருளாக மாறியுள்ளது.

இதனை அடிப்படையாகக் கொண்டு உரிய ☞2

# கல்வி மறுசீரமைப்பு 2026இல் தொடங்கும்

## பிரதமர் அறிவிப்பு

புதிய கல்வி மறுசீரமைப்பை 2026ஆம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகப் பிரதமர்ஹரினிநேற்றுநாடாளுமன்றத்தில் அறிவித்தார். 2025ஆம் ஆண்டுக்குள் அதற்கான தயார்ப்படுத்தல்கள் முன்னெடுக்கப்படும் என்றும் ☞9



# திருகோணமலை மாவட்டத்தில் 1,800 ஆசிரியர் வெற்றிடங்கள்

திருகோணமலைமாவட்டத்தில் தொடக்கக்கல்வியில்278ஆசிரியர் வெற்றிடங்கள், இடைநிலை கல்வியில் 991 ஆசிரியர் வெற்றிடங்கள், உயர்நிலைக் கல்வியில் 606 ஆசிரியர் வெற்றிடங்கள் என மொத்தமாக 1,875 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இவ்வாறு ஆசிரியர் பற்றாக்குறையோடு பாடசாலைகளை நடத்துவது வருங்காலதலைமுறைக்குஎதிரான செய்யும் ஒரு குற்றச்செயலாகும் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசன் தெரிவித்தார்.

அவர் நாடாளுமன்றத்தில் நேற்று பாதீட்டுவிவாதத்தில் அவர் உரையாற்றியபோது மேலும் தெரிவித்ததாவது:

இந்தநாட்டில்கல்வித்துறையை மேம்படுத்த வேண்டுமாயின் பாடத்திட்டம்,கற்பித்தல்முறைமை, ஆசிரியர் பணிக்கு ஆட்சேர்ப்பு முதலியவற்றில்பாரியமாற்றங்கள் செய்யப்படவேண்டும். அத்தோடு நிதி ஒதுக்கீடு, ஆளணி மற்றும் பௌதீகவளப் பற்றாக்குறைக்கும் தீர்வு காணவேண்டும்.

நமது நாட்டில் ☞8

# 5 திட்டங்கள் ஊடாக கல்வி மறுசீரமைப்பு

## பிரதமர் ஹரினி நாடாளுமன்றில் தகவல்

பாடத்திட்டங்களை மாத்திரம் மறுசீரமைப்பது கல்வி மறுசீரமைப்பாக கருதப்படமாட்டாது. ஐந்து திட்டங்கள் ஊடாக கல்வி துறையை மறுசீரமைக்க தீர்மானித்துள்ளோம். பாடசாலைகளின் அடிப்படைசுகாதாரவசதிகள்மேம்பாட்டில் பெருந்தோட்ட பாடசாலைகள் குறித்து விசேட கவனம் ☞9

# கொழும்பு தேசிய பாடசாலைகளில் தமிழ் பிரிவுகள் திட்டமிட்டு குறைப்பு

## மனோ கணேசன் குற்றச்சாட்டு

கொழும்பில் உள்ள பிரபல தேசிய பாடசாலைகளில் தமிழ் பிரிவுகளில் வகுப்புகள் திட்டமிட்டு குறைக்கப்படுகின்றன. இது, பல்லின மக்கள் வாழும் இங்கு தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த இருக்கும் வாய்ப்பை இல்லாமலாக்கும்செயலாகும்என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ☞8

## இனி இது .....

ஆகியோரின் கட்சிகளுடன் இணைந்து போட்டியிட உள்ளதாக ரெலோ தலைவர் செல்வம்அடைக்கலநாதன்தெரிவித்திருக்கிறார்.

ஜனநாயகக் கூட்டணியில் புதிதாக இணைந்திருக்கும் கட்சிகளின் செல்வாக்கெல்லாம் யாழ்ப்பாணத்தில் மட்டும்தான் அதற்கு வெளியே அவர்களுக்கு ஆதரவுத் தளமோ கட்சிக் கட்டமைப்போ இல்லை என்பதுதான் செல்வத்தின் கருத்து நிலைப்பாடு என்பதை இந்தப் பத்தியில் ஏற்கனவேஒருதடவைசுட்டிக்காட்டியிருந்தேன். இப்போது அதையே அவர் பகிரங்கமாகக் கூறியிருக்கிறார்.

சந்திரகுமார் ஈபிடிபியின் எச்ச சொச்சம் என்கிற கருத்து நிலைப்பாடு எடுத்து வைக்கப்பட்டு,துரோகியுடன்சேர்ந்துவிட்டார்கள் என்கிற காட்டமான விமர்சனங்கள் முன்வைக்கப்படும்நிலையில்யாழ்ப்பாணம் கிளிநொச்சிக்கு வெளியே தமது கூட்டணியை அவர் புனிதப்படுத்த முயற்சிக்கிறார்.

"ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி இடம்பெற உள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து சபைகளிலும் போட்டியிட உள்ளது.

யாழ்ப்பாணத்தில்முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர்களாக சரவணபவன் மற்றும் சந்திரகுமார் ஆகியோரின் கட்சிகளுடன் இணைந்து போட்டியிட உள்ளோம். ஏனைய இடங்களில் ஜனநாகய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் மாத்திரமே ஒரு கூட்டாக இத் தேர்தலில் போட்டியிட உள்ளது.

அதற்கான கட்டுப் பணத்தை செலுத்த நடவடிக்கைகளைமேற்கொண்டுவருகிறோம். ஒட்டு மொத்தமாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி அனைத்துச் சபைகளிலும் போட்டியிடும்.

அண்மையில் 9 கட்சிகள் இணைந்து ஒரு கலந்துரையாடல் மத்திரமே முன்னெடுக்கப்பட்டது. 9 கட்சிகளும் இணைந்துள்ளோம்என்றுதெரிவிக்கவில்லை. இந்தக்கூட்டு யாழ்ப்பாணத்தில் மாத்திரமே அமையஇருக்கின்றது.முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனின் கட்சி தனித்து போட்டியிட உள்ளது. ஐங்கரநேசனின் கட்சி தனித்து போட்டியிடுகின்றதா இல்லையா என்று தெரியவில்லை. எனினும் இந்த அணியில் இருந்து விலகி உள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

யாழ். தேர்தல் தொகுதியில் முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்களாகசரவணபவன் மற்றும்சந்திரகுமார்ஆகியோரின்கட்சிகளுடன் இணைந்து போட்டியிட உள்ளோம். ஏனைய இடங்களில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி அங்கத்துவக் கட்சிகளுடன் இணைந்து போட்டியிட உள்ளோம்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

அவர் சொல்கிற படியே நடத்தப்பட்டது கலந்துரையாடல்தான்என்றால்,அந்தக்கூட்டம் முடிந்ததும் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஸ் பிரதேமச்சந்திரன், 9 கட்சிகளும் இணைந்து உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்ளும் என்று அறிவிக்கப்போவதில்லை. அப்படி அறிவிப்பு வெளியான காரணத்தாலேயே அந்தக் கூட்டில் தாங்கள் இல்லை என்று தமிழ் மக்கள் கூட்டணியும் தமிழ்த் தேசிய பசுமை இயக்கமும் வெளிப்படையாக அறிவித்தன.

ஆக மொத்தத்தில் கூட்டணிக்குள் என்ன நடக்கின்றது என்பது இணைத் தலைவர்களுக்கே தெரியாத, புரியாத நிலையில்தான் கூட்டணி ஓடுகின்றது என்பது தெளிவாகின்றது. ஆளுக்கொரு கதை கூறுகின்றார்கள். இதையேதான் அவர்கள் கூட்டமைப்புக்குள்ளும்செய்தார்கள். இப்போது கூட்டணிக்குள்ளும் செய்கிறார்கள்.

அதுவும்போக, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்சரவணபவனின்ஜனநாயகத்தமிழ் அரசுக் கட்சி இன்னமும் தமது நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவிக்கவில்லை. சேர்ந்து போட்டியிடுவதில்லை என்று அவரது பெயரில் வெளியான அறிவிப்புக்குக்கூட உத்தியோகபூர்வ மறுப்பு எதனையும் அவர் வெளியிடவில்லை. இதனால் பெயரளவில் உள்ள அவரது கட்சியும்கூட இந்தக் கூட்டுக்கள் உள்ளது என்று நிச்சயம் சொல்லமுடியாது. சந்திரகுமாரும்கூட கடைசி நேரத்தில் கிளிநொச்சியில் சுயேச்சையாகச் செல்வதற்கான சாத்தியங்கள் இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

........................

தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாணத் தொகுதிக்கிளைக்கூட்டம்நேற்றுஇடம்பெற்றது. யாழ். மாநகர சபைக்கான வேட்பாளர்கள் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் இது. ஏற்கனவே 2023இல் போடப்பட்ட பட்டியலில் இருந்தவர்களில் இருவர் இறந்துபோனார்கள், மூத்த பத்திரிகையாளர் வித்தியாதரன் உட்பட இருவர் தாம் போட்டியிலிருந்து விலகுகிறார்கள்என்றுஅறிவித்திருக்கிறார்கள். இதனால்ஏற்பட்டிருக்கும்வெற்றிடங்களுக்குப் புதியவர்களை நியமிப்பது மற்றும் தொகுதிகளுக்கு இன்னும் சிறப்பான வேட்பாளர்களை நியமிப்பது என்பன குறித்து ஆராய்வதற்காக இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது. எனினும் நேற்று இறுதி முடிவுகள் எட்டப்படவில்லை.

மார்ச் 30 மீண்டும் கூடி இது குறித்து இறுதி முடிவுகளை எடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தின் முடிவில் பேசிய கட்சியின் செயலர் சுமந்திரன் தமது கட்சி தனித்துப் போட்டியிட்டாலும் நெருக்கடியுள்ள சபைகளில் சேர்ந்து போட்டியிடலாம் என்று தெரிவித்தார். குறிப்பாக மன்னாரில் முசலி, வவுனியா வடக்கு, கிழக்கில் சம்மாந்துறை போன்ற சபைகளில் தனித்தனியாகப் போட்டியிடவது பிரதிநிதித்துவத்தைஇழக்கவைக்கும்என்பதால் சேர்ந்து போட்டியிடுவதே சிறந்தது என்றார். இது தொடர்பில் கட்சிகளுடன் பேசி எந்த இணக்கங்களும்எட்டப்படவில்லைஎன்றாலும் அந்தந்தச் சபைகளில் உள்ளவர்கள் அது பற்றி முடிவெடுக்க முடியும் என்று தெரிவித்தார்.

அவர் சொல்லிவாய் மூடுவதற்கு முன்பாக தமிழ்காங்கிரஸ்வவுனியாவடக்கில்தனித்துப் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது. முசலியில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி கட்டுப்பணம் செலுத்தியுள்ளது. மொத்தத்தில் ஒற்றுமைக்கு என்றோ சங்கூதி விட்டார்கள். அதனால் இனி இந்த ஒற்றுமை, சேர்ந்து போட்டியிடல் என்பவற்றை ஓரமாக ஒதுக்கிவிட்டு அனைத்து இடங்களிலும் தெளிவான வெற்றியைப் பதிவு செய்வதற்கான உத்திகளைத் தயாரிப்பதே தமிழ் அரசுக்குச் சிறந்த வழி..

**.இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## 33 சதவீத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலிலே யாராவது இனியும் வந்து சேர்ந்து போட்டியிட விரும்பினால் எமது கட்சியின்கதவுகள்திறந்தேதான்இருக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்தபோது எமது பங்காளிக் கட்சிகளாக இருந்தகட்சிகளோடுஇணைந்துபோட்டியிடுவது தொடர்பாகப்பேசுவதற்குஎமதுகட்சித்தலைவர் எடுத்த முயற்சிகள் உங்கள் அனைவருக்கும் தெரியும். அதில்என்னநடந்தது என்பது குறித்து தலைவர் ஏற்கனவே ஊடக சந்திப்பு நடத்தி விளக்கமளித்திருந்தார். எமதுகதவுகள்என்றும் திறந்த வண்ணமாகத்தான் இருக்கின்றன.

நாங்கள் சென்ற தடவை (2023இல் உள்ளூராட்சி சபை தேர்தல் அறிவிப்பு விடுத்தபோது) இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி எடுத்திருந்த தீர்மானம் ஒரு தொழில்நுட்ப ரீதியான முன்மொழிவு மட்டும்தான். மற்றக் கட்சிகளும் இணங்கினால்தான் அதனைச் செய்வது என்று தீர்மானித்திருந்தோம். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அப்போது பங்காளிகாக இருந்தவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

அந்த நிலையை நிவர்த்தி செய்யும் முகமாகத் தலைவர் சில நடவடிக்கைகளை எடுத்திருந்தார். ஆனால், அவர்கள் தாங்களாக ஒரு தீர்மானத்தை எடுத்து தாம் வேறாக ஒரு கூட்டணி அமைத்திருக்கிறார்கள் என்று அறிவித்திருக்கின்ற காரணத்தினாலே நாங்கள் தமிழ் அரசுக் கட்சியாகவே தனித்துப் போட்டியிடவேண்டியசூழ்நிலைஇருக்கின்றது. அதை நாங்கள் செய்வோம்.

தமிழ் மக்களுடைய பிரதான கட்சி என்ற வகையிலே நாங்கள் தேர்தலில் தனித்துப் போட்டியிடவும் தயார். மற்றவர்கள் சேர்ந்து வந்தால் அவர்களோடு சேர்ந்து போட்டியிடவும் தயார். நாங்கள்தான் பிரதான கட்சி. அதிலே மாற்றம் இருக்காது.

தேர்தலுக்குப் பின்னர் நிர்வாகங்களை அமைக்கின்றபோதும் கட்சிகள் சேர்ந்து இணங்கிச் செயற்படவேண்டிய ஒரு சூழ்நிலை நிச்சயமாக வரும். ஆகவே அந்த வேளையிலும் ஏனைய தமிழ்க் கட்சிகளோடு இணைந்து செயற்படுவதற்குத் தயாராகவே இருக்கின்றோம் – என்றார்.

## மலையகத்தில் இடைநிறுத்தப்பட்ட

# பாடசாலை அபிவிருத்தியை முழுமைப்படுத்தவேண்டும்

## இராதாகிருஸ்ணன் எம்.பி. கோரிக்கை

ஆளும்தரப்பு கல்விக்காக ஒதுக்கியுள்ள நிதி மூலம் கடந்த காலங்களில் இடை நிறுத்தப்பட்டிருக்கும் பாடசாலைகளின் அபிவிருத்திப் பணிகளை முழுமைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக பெருந்தோட்டங்களில் ஆசிரியர்கள் வெற்றிடத்துக்கு பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2025 வரவு செலவுத் திட்டத்தின் கல்வி, உயர்கல்விமற்றும்தொழிற்கல்விஅமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லாட்சிக் காலத்தில் அருகில் உள்ள பாடசாலைசிறந்தபாடசாலைஎன்றதிட்டத்துக்கு பெருமளவில் நிதி ஒதுக்கப்பட்டிருந்தபோதும் இன்னும்அதிகமானபாடசாலைகளில்பணிகள் பூர்த்திசெய்யப்படாமல் இருக்கின்றன. அந்தப் பணிகளை முழுமைப்படுத்த ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று நாட்டில் பெருமளவில் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கும் ஆளும்தரப்பு விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும். குறிப்பாக பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு சந்திரிக்கா குமாரதுங்கவின் காலத்தில் 3,400 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். மஹிந்த ராஜபக்சவின் காலத்தில் 3,500 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

நல்லாட்சிக் காலத்தில் 3,196 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். தற்போதும் 2500 ஆசிரியர்களை நியமிக்க அமைச்சரவை அனுமதிவழங்கிஇருக்கிறது.என்றாலும்வழக்கு ஒன்று காரணமாக அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதனால் இந்த வழக்கு விசாரணையை விரைவுபடுத்தி இந்த ஆசிரியர்களுக்கான நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் பெருந்தோட்டங்களில் இருந்து பல்கலைக்கழக்குக்கு 1.5 வீத மாணவர்கள் செல்லவேண்டும். ஆனால் 0.5 வீதமே செல்கின்றனர். பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க உயர்தரப் பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களை அபிவிருத்தி செய்ய ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும். அங்குள்ள பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

நான் கல்வி இராஜாங்க அமைச்சராக இருக்கும்போது இந்தியாவில் இருந்து பட்டதாரி ஆசிரியர்களை கொண்டுவர நடவடிக்கை எடுத்தேன். அதனை முதலில் மக்கள் விடுதலை முன்னணியே எதிர்த்தது. அதனால் தற்போது இதனை நீங்கள் செய்யவேண்டும்.

மேலும் தேசிய தமிழ் மொழி தினம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்து கண்டி, யாழ்ப்பாணம் மற்றும் மாத்தளையில் தேசிய தமிழ்மொழிதினம்ஆரம்பித்துவைத்திருந்தார். இந்தத் தினத்தை ஆளும்தரப்புத் தொடர்ந்து முன்னெடுத்துச்செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று ஆசியர் பயிற்சி கல்லூரி, தேசிய கல்வியியல் கல்லூரி அபிவிருத்தி திட்டங்களுக்காக ஆளு;தரப்பு 2 இலட்சத்து 21 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கி இருக்கிறது. இந்த நிதி ஒதுக்கீடுகள் ஊடாக அங்கு காணப்படும்குறைபாடுகள்நீக்கப்படவேண்டும். அதேபோன்று தேவையான ஆசிரியர் பயிற்றுனர்களை நியமிக்கவேண்டும். கொட்டகலை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி நிர்மாணப் பணிகள் பாதியளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அதனைப் பூர்த்தி செய்யும் என எதிர்பார்க்கிறேன்.

நாட்டில் 424 பாடசாலைகளில் கழிப்பறை வசதி மற்றும் குடிநீர் வசதி இல்லை. மாணவர்களின் அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேபோன்று மலையகத்துக்குத் தனியான பல்கலைக்கழகம் அமைக்கப்படவேண்டும் என அனைத்து ஆளும்தரப்புக்களிடமும் தெரிவித்திருக்கிறோம். ஆனால் அது சாத்தியப்படவில்லை. மலையகத்துக்கு என பலகலைக்கழங்கள் இருக்கின்றன. ஆனால் நாங்கள் எதிர்பார்ப்பது, தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வகையில் பல்கலைக்கழக கல்லூரி உருவாக்கப்படவேண்டும் என்பதாகும். அதற்காக காணியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மேலும் இந்திய அரசின் உதவியுடன் 9 தோட்டப்பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதற்காக 300 மில்லியன் ரூபா ஒதுக்கி இருக்கிறது. அதனைநாங்கள்வரவேற்கிறோம். அதேநேரம் இந்தியாவுடன் இணைந்து இன்னும் பல அபிவிருத்தித் திட்டங்களை பெருந்தோட்டங்களில்மேற்கொள்ளவேண்டும் – என்றார்.

## பட்டலந்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி குற்றப்புலனாய்வுத் திணைக்க ளத்தில் இலஞ்ச ஊழல் வீண்விரயத்துக்கு எதிரான பிரஜைகள் அமைப்பினால் முறைப்பாடொன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன் பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பில்வெளியிடப்பட்டஆணைக்குழுவின் அறிக்கைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி ஜனாதிபதி செயலகத்தில் இந்த அமைப்பினால் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இலஞ்ச ஊழல் வீண்விரயத்துக்கு எதிரான பிரஜைகள் அமைப்பின் தலைவர் ஜாமுனி காமந்த துஷார இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதுடன் அவரால் மனுவும் கையளிக்கப்பட்டது.

மனுவைக் கையளித்ததன் பின்னர் இந்த விடயம் தொடர்பில் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நாட்டை ஆட்சி செய்த நிறைவேற்று அதிகாரம்கொண்டஜனாதிபதிரணில்விக்கிரம சிங்கவிடம் அல்ஜசீரா நேர்காணலின்போது ஊடகவியலாளர் பட்டலந்த விவகாரம் மற்றும் அதனுடன்தொடர்புடைய ஆணைக்குழுவின் அறிக்கை எங்கு என வினவினார். பாராளுமன்றத்தில்எங்குசமர்பிக்கப்பட்டதுஎன வினவினார். அத்துடன் அந்த ஊடகவியலாளர் அந்த அறிக்கையை காண்பித்தார்.

இந்தசம்பவம்இடம்பெற்றுபலவருடங்கள் கடந்துள்ள நிலையில் அரசியல்வாதிகள் ஆட்சிக்கு வருவதற்கு இந்த விடயத்தை பயன்படுத்தியுள்ளனர். ஆனால் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து சட்டத்தை உருவாக்கவில்லை.

பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உரிய நீதியை இப்போதுள்ள அரசாங்கம் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பது பொதுமக்களின் கோரிக்கையாகும். எனவே, இந்த ஆணைக்குழுவின் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு எமது அமைப்பு உட்பட பல அமைப்புகள் கையொப்பமிட்டு கோரிக்கை விடுத்துள்ள மகஜர் ஒன்றை ஜனாதிபதி செயலகத்தில் ஒப்படைத்துள்ளோம் என்றார்.

# அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாகக் கலந்துரையாடல்

(பாறூக் ஷிஹான், சர்ஜுன் லாபீர்)

அம்பாறை மாவட்டத்தில் அரசதிணைக்களங்களில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக கலந்துரையாடும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை அக்கரைப்பற்று தனியார் விடுதியில் இடம்பெற்றது.

அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு பிரதிநிதிகளுடனான இச் சந்திப்பில் அம்பாறை மாவட்டத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், குறிப்பாக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இடமாற்றம் ரீதியான பிரச்சினை ஆகியவையும் சம்பளக் கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் தொழில் கடமை ரீதியான விடயங்கள் மேலும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தனியான சேவைப் பிரமானக் குறிப்பை உருவாக்குதல் போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகள் எடுத்து வைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் மற்றும் அமைச்சின் செயலாளர்களுடன் கலந்தாலோசித்து தீர்வைப் பெற்றுத் தருவதாக இக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

துஇந்தக் கலந்துரையாடலில் அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் சட்டத்தரணி அனுராத




சேனவிரத்தன, செயலாளர் வசந்த லங்கதிலக்க, தேசிய இணைப்பாளர் துமிந்த கண்டம்பி, அம்பாறை மாவட்டம் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத் தலைவர் கபீர் கலீல் ,செயலாளர் எம்.ஐ.எம் இஹ்லாஸ், இணைப்பாளர் எஸ்.எம் சர்ஜுன் உட்பட மாவட்டத்தில் உள்ள திணைக்களங்களுக்கு பொறுப்பான இணைப்பாளர்கள் என பலரும்





கலந்து கொண்டனர்.

# தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு உலருணவு பொதிகள் வழங்கிவைப்பு

(ஹாரீஸ்)

புனித ரமழான் மாதத்தினை முன்னிட்டு நளீர் பௌண்டேசன் அமைப்பின் வேண்டுகோளிற்கிணங்க அமெரிக்க சக்காத் பௌண்டேசன் அமைப்பால் தெரிவு செய்யப்பட்ட 50 பயணிகளுக்கு உலருணவு பொதிகள் ஞாயிற்றுக்கிழமை வழங்கி வைக்கப்பட்டது.




நளீர் பௌண்டேசன் அமைப்பின் ஸ்தாபக தலைவர் எம்.ஏ.நளீரின் அயராத முயற்சியால் அமெரிக்க சக்காத் பௌண்டேசனிடம் வேண்டிக் கொண்டதற்கிணங்க தெரிவுசெய்யப்பட்ட வரிய குடும்பங்களுக்கு தலா 5000 ரூபா பெறுமதியான உலருணவு பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

நாவிதன்வெளி பிரதேசத்தில் இன, மதம் பாராமல் பல்வேறுபட்ட மனிதாபிமான உதவிகளை பல வருடங்களாக நளீர் பௌண்டேசன் அமைப்பு செய்துவருகின்றது. இதனடிப்படையில் இவ்வுதவித்திட்டம் கொண்டுவரப்பட்டு சாளம்பைக்கேணி 01,02,03,04 மத்திய முகாம் ஆகிய பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டது. எதிர்வரும் காலங்களில் மேலும் சில பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கும் இந்த உதவித் திட்டம் வழங்கவுள்ளதாக அதன் தலைவர் எம்.ஏ.நளீர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து இப்தார் ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது. இதில் சுமார் 100 இற்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.







# பொத்துவில் தொகுதி முகவராக உதுமாலெப்பை எம்.பி. நியமனம்

(ஹமீட்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொத்துவில் தொகுதி தேர்தல் முகவராக நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.எஸ். உதுமாலெப்பை கட்சியின் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான நிசாம் காரியப்பரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் ஒலுவில் தனியார் விடுதியில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது. பொத்துவில் பிரதேச சபை ,அக்கரைப்பற்று மாநகர சபை, அக்கரைப்பற்று பிரதேச சபை, அட்டாளைச்சேனை பிரதேச சபை, நிந்தவூர் பிரதேச சபை ,காரைதீவு பிரதேச சபை போன்ற சபைகள் உள்ளடக்கப்படுகின்றன.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட செயலாளர் ஏசி. சமால்தீன் மற்றும் முன்னாள் அதிபர் எம்.ஏ.அன்சார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# ஆசீர்வாதம்

கன்னியா திருவேற்காடு ஸ்ரீகருமாரியம்மன் ஆலய ஸ்தாபகரும்சக்திஉபாசகருமான அருள் வாக்கு சுவாமி அன்ரனி அவர்களுக்கு சர்வதேச இந்து மத பீடச் செயலாளர் சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா வாழ்த்துக்கள் தெரிவித்து கன்னியா ஆலயத்தில் வைத்து பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சடங்குகள் முக்கியமல்ல

உலக மகளிர் தினம் கடந்த வாரம் வந்தது. அதையொட்டிய நிகழ்வுகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. பல துறைகளில் பெண்களுக்காக விருதுகளை ஏற்பாடு செய்ததையும் காணமுடிந்தது. பெண்களின் பிரச்சினைகளுக்கு ஆதரவும் அக்கறையும் பெருகி வருவதைக் காண்பது மகிழ்ச்சியளிக்கிறது, ஆனால் இதுவொ–ரு சடங்காசாரமாக நிலைபெறுகிறதோ என்னும் கவலை அரிக்கின்றது. ஆலயங்களுக்குச் செல்வதையும் வழிபாடுகள் நடத்துவதையும் சடங்காகச் செய்யும் பலர் சமயங்கள் சொல்லும் அறவழியைப் பின்பற்றுவதேயில்லை என்பதைப் போன்று பெண்கள் தினமும் வெறும் சடங்காக மாறிக்கொண்டிருக்கின்றனவோ என்ற அச்சம் உள்ளது.

இப்போது பெண்களுக்கு வழங்கப்படும் கவனமும் மரியாதையும் பருவகாலத்திற்குரியதாகவும் பெருநிறுவன மனோநிலை கொண்டதாகவும் பொது நாட்காட்டிகளில் ஒரு சில முக்கிய 'நிகழ்வு' நாட்களில் ஒன்றாகவும் மையம் கொள்ளத் தொடங்கியிருக்கிறது.

இலங்கையில்பெண்களைச்சுற்றிஅதிகளவில்பிரச்சினைகள்உள்ளன.அவற்றின் மீது இந்தப் பெண்கள் தினங்களில் அரிதாகவே கவனம் செலுத்தப்படுகின்றது. பல நாடுகளைப் போலவே, பாலின அடிப்படையிலான வன்முறை, பெண்களின் தனிச் சுகாதார விடயங்கள் மற்றும் வீடுகளில் இடம்பெறும் துன்பறுத்தல்கள் என்பன இன்றும் 'சங்கடமான' விவாதத் தலைப்புகளாகவே கருதப்படுகின்றன.

சர்வதேச மகளிர் தினத்தை அடுத்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில், இலங்கையில் ''எத்தகைய முன்னேற்றங்கள் அடையப்பட்டாலும், பாலின சமத்துவம் என்பது இன்னமும் முழுமையாக எட்டப்படவில்லை. பெரும் எண்ணிக்கையான பெண்கள் ஒடுக்குமுறைகளுக்கும், வன்முறைகளுக்கும் முகங்கொடுத்து வருவதுடன் அவர்களுக்கான சமவாய்ப்புக்களும், சட்ட ரீதியான பாதுகாப்பும் மறுக்கப்படுகின்றன. பல பெண்களுக்கு கல்வி, பொருளாதார சுதந்திரம், பாதுகாப்பு என்பவற்றுக்கான அடிப்படை உரிமை மறுக்கப்படுகின்றது'' என்று தெரிவித்துள்ளது.

பெண்களின் உரிமைகளை மேம்படுத்துவதில் இலங்கையினால் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் எட்டப்பட்டிருப்பினும், சவால்கள் இன்னமும் தொடர்கின்றன. நாட்டின் மொத்த சனத்தொகையில் 52 சதவீதமாக உள்ள பெண்கள் தலைமைத்துவப்பொறுப்பில் மட்டுப்படுத்தப்பட்டளவிலேயே உள்வாங்கப்படுகின்றனர் என்பதையும் அது முக்கியமாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

''பெரும் எண்ணிக்கையான பெண்கள் வறுமையினாலும், பாலின அடிப்படையிலான வன்முறைகளினாலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அதுமாத்திரமன்றி அவர்கள் நீதியை நாடுவதிலும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்'' என்பதையும் அது ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் பெண்களுக்கு எதிரான சகலவிதமான வன்முறைகளையும் முடிவுக்குக்கொண்டுவருவதுடன், அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியத்தையும் அது மீளவலியுறுத்தியுள்ளது. அதேபோன்று பெண்கள் அவர்களது உரிமைகளை முழுமையாக அனுபவிப்பதற்குத் தடையாக இருக்கும் அசமத்துவம் மற்றும் அநீதிகளைமுற்றாகக்களையவேண்டியதன்அவசியத்தையும்சுட்டிக்காட்டியுள்ளது.

அத்தோடு இதுசார்ந்த சட்ட, கொள்கை மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், இவை குறித்த கலந்துரையாடல்களோ கருத்துப் பரிமாறல்களோ மகளிர் தினத்தில் இடம்பெறவில்லை. எதில் அக்கறை செலுத்தப்படவேண்டுமோ அதைவிட்டு விலகிச் செல்கிறோமோ என்று தோன்றுகின்றது. பெண்களின் நிலை சமூகத்தில் முன்னேற்றமடைந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால், முன்னேறவேண்டிய தூரம் இன்னமும் எவ்வளவோ உள்ளது.

இதுபோன்றவிஷயங்களில்ஏன் கவனம்செலுத்துவதில்லை? இலங்கையில், வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் தற்காலிக அடைக்கலம் அளிக்கும் ஒரு சில 'பெண்கள் தங்குமிடங்கள்' மட்டுமே உள்ளன. அவற்றில் பெரும்பாலானவை முதன்மையாக பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார அமைச்சின் கீழ் உள்ள ஒரு நிறுவனமான இலங்கை மகளிர் பணியகத்தால் நடத்தப்படுகின்றன. அறிக்கைகளின்படி, இந்தப் பணியகம் நாடு முழுவதும் 10 தங்குமிடங்களை நடத்துகிறது – இரண்டு சுயாதீனமாகவும், எட்டு அரசு சாரா நிறுவனங்களுடன் (ஹிறுநு) கூட்டாகவும் நடத்தப்படுகின்றன. ஏழு மாவட்டங்களில் எட்டு தங்குமிடங்களை நிறுவுவதற்காக 2020 மற்றும் 2021 க்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (னிநுஷீ) கையெழுத்திடப்பட்டன. 2023 வரவு செலவுத் திட்டத்தில், தங்குமிடங்களை நடத்துவதற்காக இந்தப் பணியகத்திற்கு ரூ. 12 மில்லியன் வழங்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டில், இந்தத் தொகை ரூ. 600,000 மட்டுமே அதிகரித்தது. ஒவ்வொரு வீட்டிலிருந்தும் மாதாந்திர பில் குறைந்தது ரூ. 100,000 ஆகும், எனவே அவை தொடர்ந்து நிலுவையில் உள்ளன. சில வீடுகளில், அவற்றின் கண்காணிப்பு தங்கள் சொந்த நிதியைப் பயன்படுத்தி மூடப்படாமல் பார்த்துக் கொள்கிறார்கள். ஒவ்வொரு காப்பகத்தின் நிதிப் பொறுப்பும் மகளிர் பணியகத்திற்கும் அந்தந்த அரசு சாரா நிறுவனங்களுக்கும் சமமாக இருந்ததால், கடந்த ஐந்து ஆண்டுகளில் போதுமான நிதி ஒதுக்கீடுகள் இல்லாததால், ஜனவரி 2025 நிலவரப்படி, அரசு சாரா நிறுவனங்களுக்காக ரூ. 15 மில்லியன் கடனே அரசால் சுமையாக்கப்பட்டுள்ளது.

மகளிர் தினத்தைச் செலவிட பணத்தைச் செலவிடும் அரச அலுவலகங்கள் இது பற்றி அக்கறைப்படுவதில்லை என்பது கவலை தரும் விடயம்.

வன்முறை மற்றும் துஷ்பிரயோகத்திற்கு ஆளான பெண்களை முழுமையாக ஆதரிக்க அரச கட்டமைப்புகள் இல்லை. சர்வதேச அல்லது தனியார் நன்கொடையாளர்கள், இத்தகைய நீண்டகால முயற்சிகளுக்கு நிதியளிப்பதற்கு ஆதரவாக இல்லாததால், தங்குமிடங்களுக்கு நிதியளிப்பது கடினமாக இருக்கின்றது என்று வல்லுநர்கள் கூறுகின்றனர். பாதிக்கப்படும் பெண்கள் பாதுகாப்பாகத் தங்குவதற்கு தங்குமிடங்கள் அவசியம்.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பில் பணிபுரியும் சட்ட அமுலாக்க அதிகாரிகள், நிலைமையை நிவர்த்தி செய்ய ஒரு மாவட்டத்திற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட தங்குமிடங்கள் அவசரமாகத் தேவை என்ற சமூகங்களின் கருத்துக்களை எதிரொலிக்கின்றனர். இலங்கை முழுவதும் உள்ள காவல் நிலையங்களில் உள்ள குழந்தைகள் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம் தொடர்பான விசாரணைக்கான இலங்கை காவல் பணியகத்தை அடையும் புகார்களின் எண்ணிக்கை 2020 முதல் 2023 வரை அதிகரித்துள்ளது. காவல்துறையின் கூற்றுப்படி, 2022 ஆம் ஆண்டில், மொத்தம் 136,677 முறைப்பாடுகள் பெறப்பட்டன; 2023 இல், 136,221 மற்றும் 2024 இல் (செப்டம்பர் வரை) 108,570 முறைப்பாடுகள் பெறப்பட்டன. எனவே, பிரச்சினையின் அளவு தெளிவாகத் தெரிகிறது. ஆளும்தரப்பும் பிற பங்குதாரர்களும் இந்த வி;யத்தை விரைவாகவும் விடாமுயற்சியுடனும் தீர்க்கவேண்டும். கொண்டாட்டங்களும் வேண்டும்தான், அதற்கு முதலில் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவேண்டும்தானே!

# ரணில் - ஹசன்: யார் வென்றார்கள்?

தேபிந்த்

கடந்தவாரத்தில் 'வைரல்' ஆனவிடயங்களில் ஒன்று அல்ஜெசீரா தொலைக்காட்சியின் நெறியாளர்களில் புகழ்பெற்றவரான மெஹ்தி ஹசன் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்திய நேர்காணல்.

லண்டனின் கான்வே ஹாலில் நடைபெற்ற இந்த நேர்காணல் கடந்த வியாழக்கிழமை (6) ஒளிபரப்பப்பட்டது. இந்த நேர்காணலில் யார் வென்றார்கள் என்று சொல்வது கடினம். அந்தக் கேள்விக்குப் பதிலளிப்பது முன்னாள் அமெரிக்க அதிபர் ரிச்சர்ட் நிக்ஸனின் டேவிட் ஃப்ரோஸ்ட்டுடனான நேர்காணலில் யார் வென்றார்கள் என்பதைக் கண்டுபிடிப்பதற்கான மு-யற்சியைப் போன்றது.



பின்னாளில் உலகப் புகழ்பெற்ற 'வோட்டர் கேட்' ஊழல் வழக்கின் பெரும் சுமை அந்த நேர்காணலின்போது நிக்சனின் தோளில் இருந்தது. இன்றைய மொழி நடையில் சொன்னால் அன்று நிக்சன் 'ரோஸ்ட்' செய்யப்பட்டார். இருந்தாலும் நிக்சன் தன் மீதான விமர்சனங்களுக்குப் பதில் சொல்லித் தன்னை ஓரளவு மறுவாழ்வு செய்துகொள்ளவும் நியாயப்படுத்தவும் முடிந்தது.

ஹசன்- - விக்ரமசிங்கே நேர்காணல் அதிலிருந்து நிறையவே வித்தியாசமாக இருந்தது. ரணில் தன்னை நியாயப்படுத்துப் பொய்களையும் தேவையற்ற கதைகளையும் கட்டவிழ்த்துவிடுவார் என்பது ஹசனுக்குத் தெரிந்திருக்கும்போலும். அதனால், அவர் ரணிலின் நீட்டி முழக்கும் விளக்கங்களுக்கும் மடைமாற்றிச் செல்லும் கதைகளுக்கும் இடமளிக்கவில்லை. ஃப்ரோஸ்ட் அப்படியிருக்கவில்லை. நிக்கசனின் நிதானமான பதில்களை அவர் நிறுத்தி நிதானித்து வெளிப்படுத்த இடமளித்தார். ஹசனின் கேள்விகள் ரணிலின் குரல்வளையை நெருக்கிப் பிடிப்பனவாக இருந்தன. ரணிலின் பதில்களை இடைநடுவில் வெட்டிமுறித்த ஹசனின் கேள்வி கேட்கும் பாணியில் எதிர்பாராத விதமாக ரணிலை மடக்கும் தோரணை அளவுக்கு அதிகமாகவே இருந்தது.

நேர்காணல் மூன்று கருப்பொருள்களைப் பற்றி விரிவாகப் பேசியது. கோத்தபய ராஜபக்சவின் வீழ்ச்சிக்குப் பிறகு விக்கிரமசிங்கேவின் ஜனாதிபதி பதவி, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களுக்குப் பிறகும் 30 ஆண்டுகால உள்நாட்டுப் போரின் போதும் அவர் தலையிட்டது, மற்றும் இரண்டாவது மக்கள் விடுதலை முன்னணி (ஜேவிபி) கிளர்ச்சியின் போது அவர் செய்த நடவடிக்கைகள்.

தொடக்கத்திலிருந்தே வார்த்தைகளால் ஹசனுடன் கடுமையாக விளையாட முயன்றார் ரணில். ஆனால் ஹசன் விட்டுக்கொடுக்க மறுத்துவிட்டார். அவர் முன்னாள் இலங்கை ஜனாதிபதியை ஒரு மூலையில் தள்ளித் தவிக்கவிட்டுவிட்டுத் தனது கேள்விகளால் திரும்பத் திரும்பத் தாக்கினார். அவர் உறுதியானவராகவும், இரக்கமற்றவராகவும், விடாப்பிடியானவராகவும் இலங்கையில் உள்ள பௌத்த சிங்கள பேரினவாதிகளுக்குத் தோன்றினார்.

அமெரிக்க அதிபர் நிக்சனுடனான நேர்காணலில் 'வாட்டர்கேட்' ஊழல் பற்றிப் பேசத் தொடங்கியபோதுதான், ஃப்ரோஸ்ட் இரக்கமற்றவராக மாறினார். ஹசன் தொடக்கத்திலிருந்தே ரணிலுடன் இரக்கமற்றவராகவே இருந்தார், ரணிலைப் பாதியிலேயே மறித்து, அவரது பதில்கள் தூசுக்குச் சமம் என்று காட்டினார்.- ஒரு மணி நேரத்திற்கு நீண்ட இந்த நேர்காணலில் நடந்ததைச் சுருக்கமாகச் சொன்னால், பார்வையாளர்களுக்கு முன்னால் ரணிலை அவரை மோசமானஒருவராகவே காட்டினார்.

பலஇலங்கையர்களைப்பொறுத்தவரையில் ரணில் ஒரு வில்லன். இரக்கமற்றவர் ஆனால் இலட்சியவாதி. 2022இல் 'அரகலய' மக்கள் போராட்டத்தின் அடைவுகள் அனைத்தையும் திருடிச்சென்றவர். அவர் மீது வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பயன்படுத்தி ஏமாற்றியவர். போராட்டங்களை நசுக்கி, பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்களைப் பாதுகாக்கின்றவர். அவரை விமர்சிப்பவர்கள் இப்போது இந்த விமர்சனங்களை முன்வைக்கிறார்கள்.

ஹசனுடனான நேர்காணலில் ரணிலுக்கு எதிரான இந்த அம்சங்கள் அப்பட்டமாகத் துலங்கின ராஜபக்சவே ரணிலை ஒடுக்கியவர், மோசமான நிலைக்கு அவரே காரணம் என்ற ரணில் பக்கத்துக் கருத்தை ஹசன் ஒரே பதிலில் உதாசீனம் செய்தார். மகிந்த ராஜபக்ச பிரதமர் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்ட ஒரு வருடத்திற்குப் பிறகு அவரது பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்டதை தூக்கிக்காட்டி ரணிலைக் கேவலப்படுத்தினார். இதுபோலவே பிறிதொரு தருணத்தில் நாம் நீண்ட ஜனநாயகப் பாரம்பரியம்கொண்ட வன்முறைகளை விரும்பாத ஒரு சமூகம் என்று ரணில் சொல்லப்போக, மூன்று தசாப்தங்களாக உள்நாட்டுப் போரை நடத்திக்கொண்டவன்முறையைவிரும்பாத சமூகம் என்கிறீர்கள் என்று ரணிலைத் துச்சமாகத் தூக்கி எறிந்தார்.

அரசியல் வேறுபாடுகள் நட்பையும்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர்
Kalaikkathir

# ரணில்...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

தனிப்பட்ட உறவுகளையும் தடுக்காது என்ற விக்கிரமசிங்கவின் பதில், ஹசனுக்கோ அல்லது பார்வையாளர்களுக்கோ பிடிக்கவில்லை, இருப்பினும் அது ஹசன் தன்னை 'ஸ்தாபனத்தின் ஒரு பகுதி' என்று உருவாக்கிய பிம்பத்தை வலுப்படுத்தியது. ரணிலின் பதிலைக் கேட்டு பல தடவைகள் பார்வையாளர்கள் கேலிச் சிரிப்பொலியைச் சிதறவிட்டனர்.

சமூக ஊடகங்களிலும் உரையாடல்களிலும், ஹசனின் நேர்காணல் குறித்து இப்போது நிறைய விவாதங்கள் உள்ளன. சிலர் ஹசன் வெற்றி பெற்றார் எனச் சொல்கிறார்கள், மற்றவர்கள் விக்ரமசிங்கே வெற்றி பெற்றார் என்று கூறுகிறார்கள். சிலர் ஹசன், ஒரு முன்னாள் அதிபரை தரக்குறைவாக விமர்சித்து கேள்வி கேட்ட விதம் தவறு என்கிறார்கள். ஆனால் வேறு பலரோ ஹசனை எதிர்கொள்வதற்கு ரணில் இன்னும் நன்றாகத் தயாராகி இருக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டினர்.

விக்கிரமசிங்கேவின் ஆதரவாளர் ஒருவர் ஹசனின் பாணி அபத்தமானது என்றும் நல்ல ஊடகவியல் விதிமுறைகளுக்கு ஏற்ப இல்லை என்றும் ஊடகவியலாளர்களிடம் கடிந்துகொண்டார். விக்கிரமசிங்கேவை விமர்சிப்பதில் பெயர் பெற்ற ஒரு தீவிர முற்போக்கான ஆய்வாளரும் அதனை ஒப்புக்கொண்டார், ஆனால், ஜனாதிபதியான பின்னர் ரணில் வெளிப்படுத்திய அரசியல் போக்கு மற்றும் கருத்து வேறுபாடுகளை அணுகிய விதம் ஆகியவற்றுடன் பார்க்கும்போது ஹசன் அனுதாபம் கொள்ள முடியுமா, ஈவுஇரக்கம் காட்ட முடியுமா? என்பதும் அவரது கேள்வியாக இருந்தது.

நேர்காணலில் கூறப்பட்ட சில விடயங்கள் குறித்து சிலகட்டுரையாளர்கள் பலவிதமாகக் குறிப்பிடுகிறார்கள். உதாரணமாக, போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறலை மக்கள் எதிர்பார்த்தபோதும் அது ரணிலால் தடுக்கப்பட்டது என்று குற்றஞ்சாட்டும் வகையிலமைந்த கேள்விகளை 'தி மோர்னிங்' பத்திரிகையில் ஒருவர் மறுத்திருந்தார்.

"(அரகலய) போராட்டக்காரர்களுக்கு எதிராக இராணுவத்தைப் பயன்படுத்தியது உட்படப் பல விடயங்களில் விக்கிரமசிங்கே மீது குற்றஞ்சாட்டலாம். ஆனால் 2022 க்குப் பிறகு இனப் பிரச்சினை குறித்த உரையாடல்களை நிறுத்த அவர் எங்கும் தலையிடவில்லை" என்று அந்தக் கட்டுரையாளர் கூறியிருந்தார். ஆனால், பொறுப்புக்கூறல் பொறிமுறையாக பன்னாட்டு நீதியாளர்கள், வழக்குத்தொடுநர்களை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றப் பொறிமுறை ஒன்றுக்கு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ரணில் முதலில் இணங்கியபோதும் பின்னர் அதை அடியோடு கைவிட்டார். இதுபோன்ற கலப்புப் பொறிமுறைகள் இலங்கைக்கு ஏற்றதல்ல என்றும் பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

ஹசனுடனான நேர்காணலில் பார்வையாளர் பக்கம் இருந்து கேட்கப்பட்ட இது தொடர்பான கேள்விக்கு, அப்போதைய ஜனாதிபதியான மைத்திரிபால சொன்னதன்படியே கலப்புப் பொறிமுறைக்கு இணங்கினார்கள் என்றும் பின்னர் அதனை நாடு ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் கூறி தன்னை அதில் சம்பந்தப்படுத்திக்கொள்ளாமல் நழுவப்பார்த்தார் ரணில்.

இந்த நேர்காணலில் வெளிப்பட்டவை மிகச் சொற்பம்தான் என்று சொல்லுமளவிற்கு ரணிலின் கடந்த கால அரசியலில் அதிகம் இருக்கின்றன. அதனால் ரணில் நேர்காணல் ஒன்றில் கேவலப்படுத்தப்படவேண்டியவர் என்று அர்த்தமில்லை. ஆனால் அவரது அரசியல் முழுவதும் அவர் தன்னை ஒரு நேர்மையற்ற மனிதராகவே நிலைநிறுத்தி வந்திருக்கிறார் என்பதையும் மறுப்பதற்கில்லை. அதனால்தான் அவரை "நரி" என்று வர்ணிக்கின்றார்கள்.

ஹசனின் நேர்காணல் ஒளிபரப்பான பின்னர், தன்னை மிக மோசமானவராகக் காண்பிப்பதற்காக 2 மணி நேர நேர்காணலை அல்ஜெசீரா ஒரு மணி நேரத்திற்கும் குறைவானதாகச் சுருக்கியது என்று ரணில் குற்றஞ்சாட்டினார். நேர்காணலின்போது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் இருப்பார் என்று தனக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும், அவருடன் கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் அவர் அங்கிருப்பார் என்ற புரிதலுடன் தான் நேர்காணலுக்குச் சென்றார் எனவும், ஆனால், விடுதலைப் புலிகள் ஆரவுத் தளத்தைச் சேர்ந்த இருவர் ஜூரர்கள் வரிசையில் இருந்தார்கள் என்றும் தன்னிலை விளக்கமளித்துள்ளார். அதாவது, அந்த நேர்காணலில் தான் என்ன செய்யப் போகிறார் என்பதற்கான தயார்ப்படுத்தலுடன் தான் செல்லவில்லை என்பது அவரது முறைப்பாடாக இருந்தது.

தயாராகச் செல்லாததும் ஹசனையும் அவரது அணியின் தயார்ப்படுத்தல்களையும் குறைத்து மதிப்பிட்டதும் அவரதும் அவரது அணியினரதும் குறைபாடே தவிர, அதற்கான பழியை அல்ஜெசீரா மீது போடமுடியாது. அம்பிகா சற்குணநாதன் மனித உரிமைகள் விடயத்தில் ரணிலைக் கடுமையாக விமர்சிப்பவர் என்கிறபோதும், அவர் இருந்திருந்தால் தனக்கு ஆதரவாக இருந்திருப்பார் என்பதைப் போல ரணில் ஒரு விம்பத்தை உருவாக்க முயன்றிருப்பார்.

தான் வாழும் வரை- விக்ரமசிங்கே இரு முகம் கொண்ட மனிதராகவே இருப்பார். சிலர் அவரை ஒரு மீட்பர், இலங்கையின் கடைசி தாராளவாதி,- நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்டெடுத்த சிற்பி, என்று சொல்வார்கள். மற்றவர்கள் அவரை பரந்த ஒரு எதிரி, போர்க் குற்றவாளிகளைப் பாதுகாத்து ஆதரிப்பவர், இனப்படுகொலையின் பங்காளி, ஜனாதிபதியாகி அதைத் தக்கவைக்க எதையும் செய்யத் தயாராக இருந்த ஒரு இழிவான பழைய அரசியல்வாதி என்பார்கள்.

யார் சொல்வது மிகவும் சரியானது என்பதை உறுதிப்படுத்துவது கடினம். ஏனெனில் ரணில் எல்லாமுமாகத்தான் இருக்கிறார். அவர் ஒரு முழுமையான அரசியல்வாதி. கொள்கைவாதியல்லர். நேர்மைவாதியுமல்லர். தனக்குச் சாதகமான வாய்ப்புக்களை வளைத்துப் பிடித்து சுயநலத்தோடு பயன்படுத்திக்கொள்ளத் தெரிந்த மனிதர். அதனால்தான் அவர் லண்டனில் அம்பலப்பட்டு நின்றார். அப்படி அவர் அம்பலப்பட்டு நின்றார் என்பதற்காக அவர் இலங்கையின் சிங்கள மக்களுக்காகச் செய்தவைகள் எவையும் இல்லை என்றாகிவிடாது. அவர் மீது இலங்கையின் மீட்பர் என்ற விம்பம் விழுவதையும் அது தடுத்துவிடாது.

விக்கிரமசிங்கே போன்றவர்களின் மரபுகளை விமர்சிக்கும் போது இதை ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். இல்லையேல் ரணிலைப் புரிந்துகொள்ள முடியாது.



# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பெண் ஹட்டனில் கைது

(கிஷாந்தன்)

ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணைக்கு அமைவாக சந்தேக நபரான பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஹற்றன் ரயில் நிலையத்திற்கு அருகில், ஹற்றன் பொலிஸ் நிலைய அதிகாரிகளால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பதுளை, கந்தேகெதர பகுதியைச் சேர்ந்த 31 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேக நபர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்களை ஏமாற்றி, கவர்ச்சிகரமான வட்டிக்கு பணம் தருவதாக பேஸ்புக்கில் விளம்பரம் செய்து, சுமார் 4.5 மில்லியன் ரூபாவைப் பெற்று, பணத்தை செலுத்தாமல் தலைமறைவாகியுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்து ஹற்றன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கட்டார் வாழ் மூதூர் சமூகத்தின் 8ஆவது வருடாந்த ஒன்றுகூடல்

(ஹஸ்பர்)


கட்டார்வாழ்மூதூர்சமூக அமைப்பின்8ஆவதுவருடாந்த ஒன்றுகூடல் மற்றும் இப்தார் நிகழ்வு வெள்ளிக்கிழமை கத்தார் மன்சூரா வில் அமைந்துள்ளபியர்லிங் சீசன் சர்வதேச பள்ளி கேட்போர் கூடத்தில் மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

இவ்நிகழ்வுக்கு கத்தாரின் பல பகுதிகளிலும் இருந்து சுமார் 200 இற்கு மேற்பட்ட அதன் அங்கத்தவர்கள் குடும்பம் சகிதம் கலந்து கொண்டனர்.

இதன்போதுகத்தார்வாழ் மூதூர் சமூகம் - எத்.சி.கியு தொடர்பான கடந்தகால செயற்றிட்டங்கள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பானபலவிடயங்கள் தெளிவு படுத்தப்பட்டன.

கத்தார் மூதூர் சமூகம் - எம்.சி.கியு ஆரம்பிக்கப்பட்டு 8 வருடங்கள் கடந்து அதன் செயற்பாடுகள்வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு




வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# வவுனியாவில் கட்டுப்பணம் செலுத்தியது தமிழ் காங்கிரஸ்

வவுனியா மாநகரசபை உள்ளிட்ட நான்கு சபைகளிலும் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தியது அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி.

வவுனியா மாநகரசபை உள்ளிட்ட நான்கு சபைகளிலும் போட்டியிட தமிழ் தேசிய மக்கள் முன்னனி தமிழ் காங்கிரஸ் கட்சியின் கீழ் நேற்று வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை கட்டுப்பணம் செலுத்த முடியும். அதற்கமைவாக, வவுனியா மாவட்டத்தின் வவுனியா மாநகரசபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை ஆகிய நான்கு உள்ளூராட்சி மன்றங்களிலும் தமிழ் தேசிய மக்கள் முன்னனி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் தனித்துப் போட்டியிடவுள்ளது. அதற்கான கட்டுப்பணத்தை கட்சயின் மாவட்ட கிளையினர் செலுத்தியிருந்தனர். (100)

# ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணி மன்னாரில் கட்டுப்பணம் செலுத்தியது

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு நேற்று மதியம் மன்னார் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் செயலாளரும், ரெலோ கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளருமான டானியல்வசந்தன்தலைமையில்கட்டுப்பணம்செலுத்தப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை, நானாட்டான் பிரதேச சபை, முசலி பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர்.

மன்னார் பிரதேச சபை தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம்பெற்று வருகின்றமையால் மன்னார் பிரதேச சபைக்கான தேர்தல் குறித்து உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இந்த நிலையிலே ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு மன்னார் மாவட்டத்தில் நான்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கலந்துரையாடல்

(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபையினருக்கும், சம்மாந்துறை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் அவர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஞாயிற்றுக்கிழமை சம்மாந்துறை நம்பிக்கையாளர் காரியத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது, சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத்தால் மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள், போதைப் பொருள் வியாபாரம், தலைக்கவசம் இன்றி வேகமாக மோட்டார் சைக்கிளில் இரண்டிற்கும் மேற்பட்டவர்கள் பயணம், பாடசாலை மற்றும் பிரத்தியேக வகுப்புகளுக்கு செல்லும் மாணவர்களை தொந்தரவு செய்தல், வீதியோரங்களில் பயணம் செய்பவர்களுக்கு இடைஞ்சலாக கழிவுப் பொருள்கள் மற்றும் வாகனங்களை நிறுத்துதல் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

இந்நிகழ்வில், சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# செவ்வந்தி குறித்து தவறான தகவல் வழங்கியவர் கைது

கணேமுல்ல சஞ்சீவ கொலை வழக்கு தொடர்பாக தேடப்படும் பிரதான சந்தேகநபரான இஷார செவ்வந்தி குறித்து தவறான தகவல்களை வழங்கிய சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மார்ச் 24 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

திக்வெல்ல பிரதேசத்தை சேர்ந்த லஹிரு சம்பத் என்ற சந்தேகநபரையே இவ்வாறு விளக்கமறியலில் தடுத்து வைக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்தி வாதங்களை முன்வைத்த கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகள், அவரை விளக்கமறியலில் வைக்கக் கோரினர். கணேமுல்ல சஞ்சீவ கொலைச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட வேண்டிய இஷாரா செவ்வந்தி என்ற சந்தேகநபரைப் பற்றிய பொய்யான தகவல்களை இந்த சந்தேகநபர் தனது தொலைபேசி மூலம் பொலிஸாருக்கு அனுப்பி வைத்தார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன் மூலம் அவர் பொலிஸ் விசாரணைகளை தவறாக வழிநடத்த முயற்சித்தார் எனவும் கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

முன்வைக்கப்பட்ட தகவல்களை ஆராய்ந்த கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுணவல, குறித்த சந்தேகநபரை மார்ச 24 வரை விளக்கமறியலில் தடுத்து வைக்க உத்தரவிட்டார்.

# பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் விடயத்தில் உடனடித் தீர்வைத் தாருங்கள்

## தொழிற்சங்கத் தலைவர் கபீர் கலீல் கோரிக்கை

(பாறுக் ஷிஹான்)

பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தனியான சேவைப் பிரமாணக் குறிப்பை உருவாக்குவதற்கு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் தீர்வைப் பெற்றுத் தர முன்வர வேண்டும் என அம்பாறை மாவட்டம் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத் தலைவர் கபீர் கலீல் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று தனியார் விடுதியில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது -

அம்பாறைமாவட்டத்தில்அரசதிணைக்களங்களில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக பல்வேறு கலந்துரையாடல்களை பல கட்டங்களில் எம்மால் நடத்துப்பட்டுள்ளது. இதன் போது பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இடமாற்றம் ரீதியான பிரச்சினை சம்பளக் கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும்தொழில்கடமைரீதியானவிடயங்கள்மேலும் பொருளாதாரஅபிவிருத்திஉத்தியோகத்தர்களுக்கான தனியானசேவைப்பிரமானக்குறிப்பைஉருவாக்குதல் போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் உதவ முன்வர வேண்டும். - என்றார்.

இச் செய்தியாளர் சந்திப்பில் அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கங்களின்




கூட்டமைப்பு தலைவர் சட்டத்தரணி அனுராத செனவிரத்தன,செயலாளர் வசந்த லங்கதிலக்க, தேசியஇணைப்பாளர்துமிந்தகண்டம்பி,அம்பாறை மாவட்டம் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத் தலைவர் கபீர் கலீல் ,செயலாளர் எம்.ஐஎம்இஹ்லாஸ்,இணைப்பாளர்எஸ்எம்சர்ஜூன் உட்பட மாவட்டத்தில் உள்ள திணைக்களங்களுக்கு பொறுப்பான இணைப்பாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். 100



## ரணிலுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டி சில்வா, பிரியந்த பெர்னாண்டோ மற்றும் மேனகா விஜேசுந்தர ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது நீதியரசரான மேனகா விஜேசுந்தர வழக்கில் இருந்து விலகுவதால், இந்த மனுவை மே 9 ஆம் திகதி அவர் இன்றிய நீதியரசர்கள் அமர்வு முன்னிலையில் பரிசீலிப்பதற்காக அழைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இந்த மனுவை ஜனாதிபதி சட்டத்தரணி சேனக வல்கம்பாய சமர்ப்பித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட குழுவினர் இதில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

2024 நவம்பர் மாதம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 5 நீதிபதிகளுக்கான பணியிடங்கள் வெற்றிடமாக இருந்ததாக மனுதாரரான ஜனாதிபதி சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார். எனினும் அப்போதைய ஜனாதிபதி இந்த வெற்றிடங்களை நிரப்பத் தவறியதன் ஊடாக அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்குமாறு மனுதாரர் உயர்நீதிமன்றத்தைக் கோரியுள்ளார்.

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2025ஆம் ஆண்டு முதலாம் இலக்க உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்டத்தின் (262ஆம் உறுப்புரை) 26ஆவது பிரிவின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கமைய இந்த அறிவித்தல் வெளியிடப்படுகிறது.

அதற்கமைய கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேசசபை, மன்னார் மாவட்டத்தின் மன்னார் பிரதேசசபை மற்றும் அம்பாறை மாவட்டத்தின் தெஹியத்தகண்டி பிரதேசசபை ஆகியவற்றுக்கான உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான வேட்புமனு குறித்த அறிவித்தல் இன்று வெளியிடப்படுகிறது.

அத்துடன், 2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் மற்றும் கட்டுப்பணம் பௌர்ணமி, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமை ஆகிய திகதிகளில் (எதிர்வரும் 13, 15, 16, 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் ) ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

இம்மாதம் 24ஆம் திகதியிலிருந்து 27ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவினால் முதலாவது வேட்புமனு பத்திரம் மற்றும் இரண்டாவது வேட்புமனு பத்திரத்தில் சேர்க்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை, அவற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய ஆகக் குறைந்த இளைஞர் மற்றும் பெண்கள் பிரதிநிதித்துவத்தின் எண்ணிக்கை மற்றும் கட்டுப்பணம் குறித்த தகவல்கள் கடந்த முதலாம் திகதி வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது - என்றுள்ளது.

## தேசபந்துவைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யுமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தேசபந்து தென்னகோனுக்கு வெளிநாட்டு பயணத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, நீதிமன்றத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு, ஆஜராகாமல் தவிர்ப்பவர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல நேற்று தெரிவித்தார்.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது தராதரம் தொடர்பில் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது எனவும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

## கொழும்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நடைபெற்ற 2025 வரவு - செலவுத் திட்டத்தின் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பில் இருக்கும் பிரதான கல்லூரிகளான ரோயல், இசிபதன மற்றும் டி.எஸ். ஆகிய மூன்று கல்லூரிகளிலும் தமிழ் பிரிவு இருந்து வருகிறது. ஆனால் படிப்படியாக இந்த வளம்மிக்க தேசிய பாடசாலைகளில் தமிழ் பிரிவு வகுப்புகள் குறைக்கப்பட்டு வருகின்றன.

கொழும்பு ரோயல் கல்லூரியில் ஆரம்ப பிரிவில் சிங்கள மொழி மூல 8 வகுப்புகள் இருக்கும் நிலையில் தமிழ் மொழி மூலம் 2 வகுப்புகளே இருக்கின்றன. அதே பாடசாலையில் கனிஷ்ட பிரிவில் தரம் 6 தொடக்கம் 11 வரையில் சிங்கள மொழி மூலம் 7 வகுப்புகள், தமிழ் மொழி மூலம் 2 வகுப்புகள் ஆங்கில மொழி மூலம் 6 வகுப்புகள் இருக்கின்றன.

ரோயல் கல்லூரியின் உயர்தர கணிதம் மற்றும் விஞ்ஞான பிரிவில் சிங்கள மொழி மூலம் 14 வகுப்புகள், தமிழ் மொழி மூலம் 2 வகுப்புகள், ஆங்கில மொழி மூலம் 2 வகுப்புகள், உயர்தர வர்த்தக பிரிவில் சிங்கள மொழி மூலம் 5 வகுப்புகள், தமிழ் மொழி மூலம் 1 வகுப்பு, ஆங்கில மொழி மூலம் 1 வகுப்பு இருக்கின்றன.

டி.எஸ். சேனாநாயக்க கல்லூரியில் ஆரம்ப பிரிவில் சிங்கள மொழி மூலம் 6 வகுப்புகள், தமிழ் பிரிவில் 1 வகுப்பு, கனிஷ்ட பிரிவில் 6 தொடக்கம் 11ஆம் வகுப்பு வரை சிங்கள மொழி மூலம் 7 வகுப்புகள், தமிழ் மொழி மூலம் 2 வகுப்புகள், ஆங்கில மொழி 2 வகுப்புகள் இருக்கின்றன.

இந்தப் பாடசாலையின் உயர்தர கணித, விஞ்ஞான பிரிவில் சிங்கள மொழி 4 வகுப்புகள், தமிழ் மொழி 1 வகுப்பு, ஆங்கில மொழி 2 வகுப்புகள். உயர்தர வர்த்தக பிரிவில் சிங்கள மொழி 4 வகுப்புகள், தமிழ் மொழி 1 வகுப்பு, ஆங்கில மொழி 2 வகுப்புகள் இருக்கின்றன.

இசிபத்தன கல்லூரியில் ஆரம்ப பிரிவில் சிங்கள மொழி மூல 6 வகுப்புகள், தமிழ் பிரிவில் 1 வகுப்பு, கனிஷ்ட பிரிவில் 6 தொடக்கம் 11ஆம் வகுப்பு வரை சிங்கள மொழி மூலம் 6 வகுப்புகள் தமிழ் மொழி 1 வகுப்பு, ஆங்கில மொழி 1 வகுப்பு. இந்த பாடசாலையின் உயர்தர பிரிவில் சிங்கள மொழி 6 வகுப்புகள் தமிழ் மொழி 1 வகுப்பு என்றவாறே காணப்படுகின்றன. இது மிகவும் பாரபட்சமான நிலைப்பாடாகும்.

சிங்கள, தமிழ் முஸ்லிம்கள் என பல இனங்கள் ஒன்றாக வாழ்கின்ற இடங்களில்தான் தேசிய நல்லிணக்கத்தை உருவாக்க முடியும். பல்லின மக்கள் வாழும் இந்த பிரதேசங்களில் நாங்கள் சிங்கள, தமிழ், முஸ்லிம் பாடசாலைகள் என அமைத்துவிட்டு, சிறு வயதிலேயே மாணவர்களை சிங்களம், தமிழ், முஸ்லிம் என பிரித்து வைத்து, அவர்கள் 18 வயதான பின்னர் நீங்கள் அனைவரும் இலங்கையர்களாக ஒன்றாக எழுந்து நிற்க வேண்டும் என தெரிவித்தால், அது சாத்தியமாகப் போவதில்லை. இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியுமான ஒரு மாவட்டமாக கொழும்பு மாவட்டம் காணப்படுகிறது.

அதனால் சிறந்த வளங்கள் காணப்படும் ரோயல், இசிபத்தன, டி.எஸ் ஆகிய கல்லூரிகளில் தமிழ் மொழி வகுப்புகளை அதிகரிக்க வேண்டும். ஆனால் சில அதிகாரிகள் ஒன்றுபட்டு இந்த கல்லூரிகளில் தமிழ் வகுப்புகளை திட்டமிட்டு குறைக்கிறார்கள். அது மாத்திரமின்றி ஒரு வகுப்பில் 40 மாணவர்கள் இருக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளபோதும் இடமிருக்கின்றபோதும் மாணவர்களை அந்த வகுப்புகளில் சேர்ப்பதில்லை. இந்த சம்பவம் நீண்டகாலமாகவே இருந்து வருகிறது. நாங்கள் ஆட்சி செய்துவந்த காலத்திலும் இருந்து வந்தது. அப்போது இது தொடர்பாக அன்றைய கல்வி அமைச்சருடன் நான் சண்டையிட்டிருக்கிறேன். அதனால் இந்த விடயங்களை போராடியே பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்த ஆளும்தரப்பு அதில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அதேபோன்று சிங்கள, தமிழ், முஸ்லிம் மாணவர்கள் ஒரு கூரையின் கீழ் படிக்க முடியுமான சூழலை ஏற்படுத்த வேண்டும். அதனை முதலில் பிரபல பாடசாலைகளில் ஆரம்பியுங்கள். கொழும்பில் அதனை செய்ய முடியும்.

யாழ்ப்பாணத்தில் சிங்கள மகா வித்தியாலயம் இருக்கிறது. எனது தனிப்பட்ட நிலைப்பாடு என்னவென்றால், சிங்கள மகா வித்தியாலயம் என ஒன்று அங்கு தேவையில்லை. யாழ்ப்பாணத்தில் இருக்கும் பிரபல யாழ். இந்து கல்லூரி, மத்திய கல்லூரி இருக்கின்றன. இந்த கல்லூரிகளில் சிங்களப் பிரிவை ஆரம்பித்துவைத்து இந்த மகா வித்தியாலயத்தை அதனுடன் இணைத்துவிடுங்கள். அப்போது ஒரே கூரையின் கீழ் தமிழ் சிங்கள மாணவர்கள் கல்வி கற்கும் சூழல் ஏற்படும்.

அதேபோன்று மலையகத்தில் நுவரெலியாவை தவிர மற்ற இடங்களில் விஞ்ஞானப் பிரிவு இல்லை. மலையகத்தில் பாடசாலைக்கு அண்மித்து இருக்கும் 2 பேர்ச் காணியை பாடசாலைக்குப் பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் நாங்கள் அமைச்சரவை அனுமதியை பெற்றுக்கொண்டிருக்கிறோம். அதனை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மலையக மக்களுக்கு 2003ஆம் ஆண்டிலே முழுமையான குடியுரிமை கிடைத்தது. அதனால் அரசியல், பொருளாதார, கல்வி, கலாசாரம் என அனைத்திலும் பின்தங்கி இருக்கிறோம். அதனால் நாங்கள் யாரும் யாரையும் குறைகூறி பயனில்லை என்றார்.

## திருகோணமலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும் என்ற நோக்கத்தோடு கல்வி கற்கின்றனர். இதன் பொருட்டு ஆண்டுதோறும் அண்ணளவாக 265,000 மாணவர்கள் க.பொ.த உயர்தர தேர்வுக்குத் தோற்றுகின்றனர். இவர்களில் 165,000 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெறுகின்றனர். அவ்வாறு தகுதி பெற்றவர்களில் 40,000 மாணவர்களுக்கு மட்டுமே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கிறது. மேலும் 10,000 மாணவர்களுக்கு கல்வியியற் கல்லூரி அனுமதி கிடைக்கிறது.

தேர்வில் வெற்றி பெறாத 100,000 மாணவர்களும் பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெற்று அனுமதி கிடைக்காத 115,000 மாணவர்களும் என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறி நிற்கின்றனர். இவர்களுக்கு வழிகாட்டவேண்டிய பொறுப்பு அரசுக்கும் சமூகத்துக்கும் உண்டு.

நமது அண்டைய தேசமான இந்தியா உட்பட உலகில் உள்ள பல்வேறு நாடுகளும் தத்தம் நாட்டிலுள்ள இத்தகைய மாணவர்களுக்காக பொலி டெக்னிக் எனும் தொழில்நுட்ப கல்லூரிகளை நடத்துகின்றன.

இக்கல்லூரிகளில் நூற்றுக்கணக்கான மூன்றாண்டு பட்டயப் பயிற்சி நெறிகள் கற்பிக்கப்படுகின்றன. பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்கள் இவற்றில் இணைந்து கல்வி கற்று எளிதாக வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. அத்தகைய பயிற்சி நெறிகளை இந்நாட்டிலும் தொடங்க வேண்டும்.

நமது நாட்டின் கல்வி முறையானது தொழில்சந்தையோடு இணைந்ததாக இல்லை. அதாவது தொழில் சந்தையில் வேலையொன்றை பெற்றுக்கொள்வதற்குரிய தகைமைகளும் அனுபவங்களும் அவர்களிடம் இல்லை. இதனால் பட்டதாரிகள் தொழிற்சந்தையில் வேலையை பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளனர். எனவே, நம் நாட்டு பாடத்திட்டங்களை தொழிற்சந்தை தேவைகளோடு இணைந்ததாக மாற்றியமைக்க வேண்டும்.

மேற்கு நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள் தமது மாணவர் உலகத் தொழில் சந்தையில் போட்டி போட்டு வேலையைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் ஆயிரக்கணக்கான பட்டப்படிப்புகளை நடத்துகின்றன. எடுத்துக்காட்டாக, டொரன்டோ பல்கலைக்கழகம் 948 பட்டப் படிப்புக்களை நடத்துகிறது. இதுபோல நமது நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களும் வேலை வாய்ப்புக்களைப் பெறக்கூடிய பட்டப்படிப்புக்களை நடத்த ஆவன செய்யவேண்டும். இதன் பொருட்டாக தொழிற்பயிற்சி, ஆய்வு நிதி மற்றும் ஸ்டெம் (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம்) திறன் மேம்பாட்டுத் திட்டங்களை உள்ளடக்கிய நன்கு வரையறுக்கப்பட்ட உயர்கல்வி சீர்திருத்த உத்தியை அரசு அறிமுகப்படுத்த வேண்டும்.

இந்த ஆளும்தரப்பால் முன்வைக்கப்பட்டுள்ள பாதீட்டில் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கு 206 பில்லியன் ரூபா மீண்டெழும் செலவுக்காகவும் 65 பில்லியன் ரூபா மூலதன செலவுக்காகவும் மொத்தமாக 271 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 11 பில்லியன் ரூபா அதிகமானதாகும். இந்த அதிகரிப்பு கல்வித் துறையை பொறுத்தவரையில் போதுமானதல்ல. மொத்த பாதீட்டில் கல்விக்கான ஒதுக்கீடு 6.4 வீதமாக உள்ளது. இது குறைந்தது 10 வீதமாகவாவது உயர்த்தப்பட வேண்டும்.

ஆசிரியர் அபிவிருத்திக்கு இந்த ஆண்டில் 6.13 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 2.08 பில்லியன் ரூபா அதிகமாகும். இது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். எனினும், தொடக்கப்பள்ளிகளின் வசதியை மேம்படுத்த கடந்த ஆண்டு 302 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டில் இது 10 மில்லியன் ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. இது கவலை தரும் செய்தியாகும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டில் உள்ள பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் மோசமான உட்கட்டமைப்பு மற்றும் வரையறுக்கப்பட்ட ஆய்வு நிதியால் பாதிக்கப்பட்டுள்ளன.

அறிவு சார்ந்த பொருளாதாரமாக இலங்கை மாறுவதை நோக்கமாகக் கொண்டால், இந்த பல்கலைக்கழகங்கள் நவீன வசதிகள், ஆய்வு நிதி மற்றும் வினைத்திறனான ஆசிரியர் குழாத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும். உயர் கல்வி மற்றும் தொழில்நுட்ப கல்வித் தரத்தை மேம்படுத்தும் பொருட்டாக உட்கட்டமைப்பு மேம்பாடு, ஆராய்ச்சி மானியங்கள் மற்றும் தொழிற்துறை ஒத்துழைப்பு முதலியவற்றுக்கான ஒதுக்கீடுகளுக்கு அரசு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

இப்பொழுது உள்ள முறையில் ஆசிரியர் வளப்பங்கீடு சரியான முறையில் அமையவில்லை. ஆசிரியர் நியமனத்தின்போது பெரும்பாலான ஆசிரியர்கள், பின்தங்கிய இடங்களுக்கு நியமனங்களை பெற்று வருகின்றனர். வந்து சில காலங்களில் தத்தமது மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுவிடுகின்றனர்.

இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு கல்வியியற் கல்லூரிக்கு அனுமதி வழங்கும்போது பிரதேச செயலாளர் மட்டத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு அந்தந்த பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து பயிலுநர்களைத் தெரிவு செய்தால் இந்த சிக்கலைத் தீர்க்கலாம்.

பொது நிர்வாக அமைச்சு கிராம அலுவலர்களை நியமிக்கும்போது பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள வெற்றிடங்களுக்கு அந்தந்த பிரதேச செயலாளரின் பிரிவுகளில் உள்ளவர்களையே நியமிக்கிறது. இதே முறையை கல்வி அமைச்சும் பின்பற்றினால் ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வு காணலாம். இதுகுறித்த ஒரு கொள்கை முடிவை அரசு விரைவில் எடுத்துச் செயற்படுத்த வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தில் தொடக்கக் கல்வியில் 278 ஆசிரியர் வெற்றிடங்கள், இடைநிலை கல்வியில் 991 ஆசிரியர் வெற்றிடங்கள், உயர்நிலைக் கல்வியில் 606 ஆசிரியர் வெற்றிடங்கள் என மொத்தமாக 1,875 வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறு ஆசிரியர் பற்றாக்குறையோடு பாடசாலைகளை நடத்துவது வருங்கால தலைமுறைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஒரு குற்றச்செயலாகும். தொடர்ந்தும் இவ்வாறான வெற்றிடங்களை விட்டுக்கொண்டிராமல் அவற்றை நிரப்ப ஆவன செய்ய வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தில் 195 பாடசாலைகள் அதிபர் இல்லாமல் இயங்குகின்றன. இது மட்டுமன்றி, 73 கல்வி நிருவாக சேவை அதிகாரிகள் வெற்றிடங்களும் காணப்படுகின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் 78 கல்வி சாரா ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இதில் 73 வெற்றிடங்கள் காவலாளி தொழிலுக்கானதாகும். காவலாளிகள் இல்லாமல் பாடசாலை காணப்படுவதால் களவு போவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. ஆகவே, காவலாளிகளை நியமிக்க தாமதமின்றி ஆவன செய்ய வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தில் உடைந்து விழக்கூடிய நிலையில் உள்ள கட்டடங்களைக் கொண்ட 16 பாடசாலைகள் காணப்படுகின்றன. இவற்றை திருத்தியமைக்க 39 மில்லியன் ரூபா செலவாகும்.

திருகோணமலை மாவட்டத்தில் 12 பாடசாலைகள் தொழிநுட்ப ஆய்வுக்கூடமின்றி இயங்குகின்றன. அதேபோல வகுப்பறைகளை நவீனமயப்படுத்த வேண்டிய தேவை உள்ள 19 பாடசாலைகள் காணப்படுகின்றன.

அதேபோல 15 பாடசாலைகள் வெள்ளப் பேரிடர் ஆபத்தோடு காணப்படுகின்றன. அத்தோடு யானை தாக்குதல் அபாயத்துக்கு உள்ளாகக்கூடியவாறு 33 பாடசாலைகள் காணப்படுகின்றன. இடர்களில் இருந்து பாடசாலையை பாதுகாப்பதற்கு நிதி ஒதுக்கப்பட வேண்டும். இச்சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதன் மூலம் நாட்டினது கல்வித்துறையின் வளர்ச்சிப் பாதை வினைத்திறனுடன் செயற்படும் - என்றார்.

## பெண்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒடுக்குமுறைகளுக்கும், வன்முறைகளுக்கும் முகங்கொடுத்துவருவதுடன் அவர்களுக்கான சமவாய்ப்புக்களும், சட்டரீதியான பாதுகாப்பும் மறுக்கப்படுகின்றன. பல பெண்களுக்கு கல்வி, பொருளாதார சுதந்திரம், பாதுகாப்பு என்பவற்றுக்கான அடிப்படை உரிமை மறுக்கப்படுகின்றது.

பெண்களின் உரிமைகளை மேம்படுத்துவதில் இலங்கையினால் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் எட்டப்பட்டிருப்பினும், சவால்கள் இன்னமும் தொடர்கின்றன. நாட்டின் மொத்த சனத்தொகையில் 52 சதவீதமாக உள்ள பெண்கள் தலைமைத்துவப்பொறுப்பில் மட்டுப்படுத்தப்பட்டளவிலேயே உள்வாங்கப்படுகின்றனர். பெரும் எண்ணிக்கையான பெண்கள் வறுமையினாலும், பாலினஅடிப்படையிலான வன்முறைகளினாலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அதுமாத்திரமன்றி அவர்கள் நீதியை நாடுவதிலும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் பெண்களுக்கு எதிரான சகலவித மான வன்முறைகளையும் முடிவுக்குக் கொண்டுவருவதுடன், அவர்களதுபாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியத்தை மீளவலியுறுத்துகின்றோம். அதேபோன்று பெண்கள் அவர்களது உரிமைகளை முழுமையாக அனுபவிப்பதற்குத் தடையாக இருக்கும் அசமத்துவம் மற்றும் அநீதிகளை முற்றாகக்களையவேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டுகின்றோம். அத்தோடு இதுசார்ந்த சட்ட, கொள்கை மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## 5 திட்டங்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தப்படும் என கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்துறை அமைச்சரும், பிரதமருமான ஹரிணி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார பாதிப்புக்கு மத்தியிலும் வரவு செலவுத் திட்டத்தில் இம்முறை 619 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடு எதிர்வரும் எட்டு மாத காலத்தை வரையறுத்ததாகும்.

கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் காலம் காலமாக பேசப்படுகிறது. பாடத்திட்டங்களை மாத்திரம் மறுசீரமைப்பதை கல்வி மறுசீரமைப்பு என்று குறிப்பிட முடியாது.

பாடத்திட்டம் மறுசீரமைப்பு, மனித வள அபிவிருத்தி, அடிப்படை சுகாதார வசதிகள், கல்வி நடவடிக்கை மீளாய்வு, பாடசாலை உட்கட்டமைப்பு அபிவிருத்தி உள்ளிட்ட ஐந்து வழிமுறைகள் ஊடாக கல்வி மறுசீரமைப்புக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பாடசாலை பாடத்திட்ட மறுசீரமைப்புக்காக 250 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்வித்துறையில் காணப்படும். அதிபர் மற்றும் ஆசிரியர் சேவையில் நிலவும் பற்றாக்குறைக்கு உடன் தீர்வு காணப்படும்.

புதியகல்விமறுசீரமைப்புக்குதேவையான மனித வளங்களை சீர்படுத்திக் கொள்வதற்கு 1640 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. புதிய கல்வி மறுசீரமைப்பு குறித்து ஆசிரியர் பயிற்சி கலாசாலை மற்றும் பல்கலைக்கழகங்கள் ஊடாக ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்படும். அதற்கான நடவடிக்கைகள் இந்த ஆண்டுக்குள் முன்னெடுக்கப்படும்.

பெரும்பாலான பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி பணிகள் பல்வேறு காரணிகளால் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஒருசிலபாடசாலைகளில்நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் அவை மாணவர்களுக்கு அச்சுறுத்தலாக காணப்படுகிறது.

ஆகவே பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளஉட்கட்டமைப்புநிர்மாணிப்புக்களை நிறைவு செய்வதற்கு 11 ஆயிரம் மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலானபாடசாலைகளில்சுத்தமான குடிநீர்மற்றும்மலசலகூடவசதிகள்கிடையாது. ஆகவே அனைத்து பாடசாலைகளுக்கும் அடிப்படை சுகாதார வசதிகள் வழங்கப்படும்.

இந்த ஆண்டுக்குள் இந்த பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும். அடிப்படை சுகாதார வசதிகளில் பெருந்தோட்ட பாடசாலைகள் குறித்து விசேட அவதானம் செலுத்தப்படும்.

கல்வி மீளாய்வு நடவடிக்கைகள் அத்தியாவசிமானது. நவீன உலகுக்கு பொருத்தும் வகையில் பாடவிதானத்துடன் தொடர்புடையமீளாய்வுகள்முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதன் பொறுப்பு பரீட்சைகள் திணைக்களத்துக்குபொறுப்பாக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் செலவுகளில் பரீட்சைகள் திணைக்களத்துக்கு இம்முறை 12,360 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

உயர்கல்விமுறைமைநவீனஉலகுக்கும், தொழிற்றுறைக்கும் சாதகமான அமைய வேண்டும். ஒருசில பல்கலைக்கழகங்களில் தனிப்பட்ட அரசியல் நோக்கங்களுக்காகவே பீடங்களும், கற்கை நெறிகளும் ஆரம்பிக்கப்பட்டன. இதனால்மாணவர்களுக்கு எவ்வித பயனும் கிடைக்கவில்லை.

ஞாயிற்றுக்கிழமை அம்பாறை மாவட்டத்துக்கு சென்றிருந்தேன். அங்குள்ள ஹாடி தொழில்நுட்ப கல்லூரிக்குச் சென்றிருந்தேன். இந்தக் கல்லூரி 1955 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இருப்பினும் அடிப்படை வசதிகள்கூட அங்கு இல்லை. மாணவர்கள் பல அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளார்கள். அங்கு காணப்படும் பற்றாக்குறைகளை வெளிப்படுத்தும் புகைப்படங்களைச்சபைக்குசமர்ப்பிக்கிறேன்.

அடிப்படை வசதிகளற்ற வகையில் செயற்படும் உயர்கல்வி நிறுவனங்களை அபிவிருத்தி செய்வதற்கு 36,801 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நவீன தொழில் துறைக்கு போட்டியிடும் வகையில் தொழில் துறை கல்வி முறைமை மறுசீரமைக்கப்படும்.

அரசியல் காரணிகளுக்கு அப்பாற்பட்ட வகையில் கல்வி துறை மேம்படுத்தப்பட வேண்டும். சிறந்த மாற்றங்களுக்கு அனைத்து தரப்பினரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறோம் என்றார்.

## கல்வி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதியளித்தார்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சு சார் ஆலோசனைக்குழுஅவருடையதலைமையில் மார்ச் 07 நாடாளுமன்றத்தில் கூடியபோதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கல்வி மற்றும் உயர்கல்வி பிரதியமைச்சர் வைத்தியர் மதுர செனவிரத்ன உட்பட அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்வி, உயர்கல்விமற்றும்தொழிற்கல்விஅமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

புதிய கல்வி மறுசீரமைப்பு ஐந்து பிரதான தூண்களின் அடிப்படையில் நடைமுறைப் படுத்தப்படஇருப்பதாகக் குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

இதற்கு அமைய, புதிய பாடநெறியை அறிமுகப்படுத்தல், மனிதவளத்தை மேம்படுத்தல், உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டல் மற்றும் உரிய மதிப்பாய்வு மேற்கொள்ளல் போன்ற பிரதான விடயங்களின் கீழ் இந்தக் கல்வி மறுசீரமைப்பு தரம் ஒன்று முதல் தரம் ஆறு வரையான மாணவர்களுக்காக 2026ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்றார்.

கல்வி, உயர்கல்வி மற்றம் தொழிற் கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவுடன் இணைந்ததாக ஆறு உப குழுக்களை அமைப்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இதற்கமைய, கல்வி மறுசீரமைப்பு, பாடசாலைகளில் காணப்படும் பௌதீக மற்றும் மனித வளக் குறைபாடுகள், பாடசாலைகளில் இடைத்தர வகுப்புக்களுக்கு மாணவர்களை அனுமதித்தல், கல்விச் சபையை நிறுவுதல், உயர் கல்விப் பிரிவு, திறன்கல்விப் பிரிவு ஆகியவற்றின் கீழ் ஆலோசனைக் குழுவுடன் இணைந்ததாக ஆறு உப குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன், குறித்த அமைச்சுத் தொடர்பில் தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் காணப்படும் விடயங்கள் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இதற்கு அமைய, அமைச்சு சார் ஆலோசனைக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆற்றுப்படுத்திய பிரச்சினைகளுக்குப் பதிலளித்த பிரதமர், பாடசாலைகள் மத்தியில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், பாடசாலைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக பாடசாலைகளுக்குப்பௌதீகஆய்வுகளைமேற்கொள்ளல், தற்பொழுதுஇடைநிறுத்தப்பட்டுள்ளகட்டுமானப் பணிகளுக்கு அவசியமான நடவடிக்கைகள் எடுத்தல்மற்றும்பாடசாலைகளில்காணப்படும் பாதுகாப்பற்ற சூழலைப் புனரமைத்தல் போன்றவற்றுக்காக இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் கல்வித்துறைக்கான ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




# தொண்டைமானாறு தேசிய வெளிக்கள நிலையம் இன்று தன் சுயங்களை இழந்துவிட்டு நிற்கின்றது

## நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் கஜேந்திரன் ஆதங்கம்

பாரம்பரியம் மிக்க - தொன்மை மிக்க - பல தசாப்தங்களைக் கடந்து வடக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தியில் மிகப்பெரும் பங்காற்றிக்கொண்டு இணைந்து செயற்பட்டுக்கொண்டிருக்கும் தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு இன்று அதன் சுயங்களை இழந்து கல்வி பின்னணியை விட்டு விலத்தி மாணவர் நலன்களையும் விட்டு விலத்தி வியாபார நோக்கான நிறுவனமாக மாறிக்கொண்டு வருகின்றது.

யாழ்வடமராட்சிசியில் நேற்று செய்தியாளர்களை சந்தித்தபோது கருத்து தெரிவித்த தொண்டைமானாறு தேசிய வெளிக்கள நிலையத்தின் நிறைவேற்று அதிகார செயற்குழு உறுப்பினரும் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளருமான பரா. கஜேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

பாரம்பரியம் மிக்க தொன்மை மிக்க பல தசாப்தங்களைக் கடந்து வடக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தியில் மிகப்பெரும் பங்காற்றிக்கொண்டு இணைந்து செயற்பட்டுகொண்டிருக்கும் தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு இன்று அதன் சுயங்களை இழந்து கல்வி பின்னணியை விட்டு விலத்தி மாணவர் நலன்களையும் விட்டு விலத்தி வியாபார நோக்கான நிறுவனமாக மாறிக்கொண்டு வருகின்றது.

வடபிராந்தியத்தின் கல்வித்தரத்தை மேம்படுத்தும் நோகக்த்துடன் கல்வி ஆர்வலர்கள் ஒருங்கிணைந்து 1968 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தேசிய வெளிக்கள நிலையமானது அக்காலத்தில் நிலவிய கல்வி முறைக்கமைவாக பிராந்திய கல்விப் பணிப்பாளர்களுடைய ஆளுகைக்குள் உட்படுத்துப்பட்டுஅவர்களுடையபங்குபற்றுதலுடன் கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 10 ஆம் திகதி வரைக்கும் இயங்கிவந்தது.

ஆனால் அதற்கு பின் இதன் நிலைமை என்ன? வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரைக்கும் கல்வியே எங்கள் மூலதனம். ஆனால் இன்று அதில் ஊழல்வாதிகளாக காணப்படும் ஓய்வுநிலை கல்வியியலாளர்களும் ஒரு சில பல்கலைக்கழகத்தை சேர்ந்த விரிவுரையாளர்களும் தனிப்பட்ட வருமாணனத்தை ஈட்டுவதற்காகவும், தனிப்பட்ட வருமானத்தை பெருக்குவதற்காகவும் தேசிய வெளிக்கள நிலையத்தின் நிலையான வைப்புகளில் இருக்கும் பெரும் தொகையான நிதியினை தங்கள் இஸ்டத்திற்கு பயன்படுத்துவதற்குமாக இந்த நிறுவனத்தை மாகாண கல்வித்திணைக்கத்தின் ஆளுகையில் இருந்து வெளிப்படுத்தி தனியே இரகசியமாக அதனை இயக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

மாகாண கல்வித் திணைக்களம், மாகாண கல்வி அமைச்சு, ஆளுநர் செயலகம், பிரதம செயலாளர் மற்றும் மாவட்ட செயலாளர் ஆகியோர் இணைந்து இதனை ஒரு முடிவுக்கு கொண்டுவர வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் மேற்குறித்த அனைவருக்கும் எழுத்து மூலம் எங்களுடைய குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளோம்.

அதனடிப்படையில் மாகாண கல்வி திணைக்களத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த தேசிய வெளிக்கள நிலையத்தை மீள சீர்ப்படுத்தி திருடர்களின் கைகளில் இருந்து மீட்டெடுத்து மீளவும் மாகாண கல்விப் பணிப்பாளரின் ஆளுகைக்கு உட்படுத்தி அதனை தேசிய வெளிக்கள நிலையத்தின் கோட்பாட்டிற்கு அமைவாக வடக்கு பிராந்தியத்தின் கல்வி அபிவிருத்திக்காக இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காலம் காலமாக தேசிய வெளிக்கள நிலையமானது தேசிய கல்வி நிறுவகத்தின் ஆலோசனைக்கு அமைவாக அவர்களின் கல்வித் திட்டத்திற்கு அமைவாக தவணைப் பரீட்சைகளை நடத்திவந்துகொண்டிருந்தது. ஆனால் இன்று வடக்கு மாகாணத்தில் அவ்வாறான தவணை பரீட்சைகள்



பொது மதிப்பீடுகள் எவையும் செய்யப்படுவது இல்லை. ஏனெனில் அது 2023 ஆம் ஆண்டு யாப்பு விதிகளை மீறி செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் மாகாண கல்விப் பணிப்பாளரினால் முற்று முழுதாக தடைசெய்யப்பட்டது.

அத்துடன் அதனை சீர்செய்யும்படி மாகாண கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்திய வேளையிலும் அவர்கள் அதை சீர் செய்யாமல் தொடர்ந்து அமைப்பு விதிகளை மீறி புதிய நிர்வாகம் அமைக்கப்பட்டு செயற்படுத்துப்பட்டு வருகிறது. எஸ்.வி.மேகேந்திரன் என்பவர் தனக்கு உகந்த நபர்களை பொறுப்புகளில் நியமித்து மாகாண கல்விப் பணிப்பாளரது அறிவுறுத்தலை செயற்படுத்தாது இயங்கி வருகின்றனர். பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களையும் நிதிகளையும் தனக்கு சார்பான ஓய்வூதியர்களை வைத்துக்கொண்டு எஸ்.வி.மகேந்திரன் இயக்குவது என்பது ஒரு தவறான முன்னுதாரணம் ஆகும்.

அடுத்து வரும் சந்ததியினருக்கு நாங்கள் வழிவிட வேண்டும். புதிய புதிய விடயங்களை உள்ளீர்க்க வேண்டும். இவ்வாறு எதனையும் செய்யாமல் அடுத்த சந்ததியை வளர்த்து விடாமல் ஓய்வு நிலையில் இருக்கும் நாங்களே ஆட்சியை நடத்த வேண்டும். நாங்களே கலிவியியலாளர்களாக இருக்க வேண்டும். நாங்கள் தான் ஆள்பவர்களாக இருக்க வேண்டும். எங்களிடமே இந்த நிதி கையாளுகைகள் இருக்க வேண்டும் என்ற வகையில் செயற்பட்டு வருவது மிகவும் மனவேதனைக்கு உரிய விடயமாகும். இதனை மிக வேகமாக சீர் செய்ய வேண்டும்.

சனிக்கிழமைகூட மாகாணகல்விபணிப்பாளரிடம் அனுமதி பெறப்படாது இரகசிய கூட்டம் ஒன்று தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறில் நடைபெற்றது. இதற்கூடாகவும் மீண்டும் ஒரு குழு தங்களை பலப்படுத்திக் கொண்டு இயங்க உள்ளது. இந்த குழுவை தொடர்ந்தும் இயங்க விடமுடியாது. 2023 ஆம் ஆண்டு மாகாண கல்விப் பணிப்பாளரால் விசாரணக்கு உட்படுப்பட்ட நிதி கையாளுகைகள், நிதி பிரமாணங்கள் தொடர்பான நடவடிக்கைகள் உடனடியாக சீர்செய்யப்பட வேண்டும். நிதி கையாளுகை என்பது குடும்ப உறுப்பினர்களை வைத்துக் கொண்டு தற்போதைய பொருளாளரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை ஒரு தவறான முன்னதாரணம் ஆகும்.

யாப்பு விதிகளையும் நிதிப் பிரமாணங்களையும் மீறிய செயற்பாடுகளாலேயே கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23 ஆம் நாள் அன்றைய தினம் மாகாண கல்விப் பணிப்பாளராக இருந்த ஜோன் குயின்ரஸ் திருஞானம் அவர்களால் நாம் விசாரணைக்கு உட்படுத்துப்பட்டோம்.

ஆனால் இன்றுவரை சீர் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்ட விடயங்கள் எவையும் சீர்செய்யப்படாதுஉள்ளன. மேற்குறித்தவிடயங்களை சீர்செய்வதற்கு ஆளுநர் நா.வேதநாயகம் ஐயா அவர்களுக்கும், கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் நிரஞ்சன், மாகாண கல்விப் பணிப்பாளர் பிரட்லி, பிரதம செயலாளர் இளங்கோவன், ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் ஒவ்வொருவருக்கும் இது தொடர்பான நிறைவேற்று அதிகாரம் கொண்ட நிறைவேற்று செயற்குழு அங்கத்தவர்கள் ஆகிய எம்மால் சீர்படுத்தல் வேண்டுகை அனுட்பிவைக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த நிறுவனத்தின் நன்மையை முன்னிட்டும் எமது மாணவ சந்ததிகளின் நன்மையை முன்னிட்டும் யாப்பின் அடிப்படையிலும் இந்த நிறுவனம் இயங்குவதற்கு எமக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கி தேசிய வெளிக்கள நிலையத்தை சீர்ப்படுத்தி முன்னெடுத்துச் செல்வதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு லக்ஸ்டோ நடத்திய 'சங்கமம்' நிகழ்ச்சி

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது லக்ஸ்டோ வலையமைப்பு மற்றும் அகில இலங்கை ஐக்கிய மக்கள் கட்சியின் ஏற்பாட்டில் மகளிர் பற்றிய சட்டங்கள், குற்றங்கள், பாதிப்பு மற்றும் போதைப் பொருளால் சீரழியும் குடும்பங்கள் பற்றிய விழிப்புணர்வு செயலமர்வு மற்றும் கவியரங்கு மரநடுகை என்பன அடங்கிய 'சங்கமம்' நிகழ்ச்சி சனிக்கிழமை மருதமுனை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

லக்ஸ்டோ வலையமைப்பின் பிரதானியும், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், தேசிய சமாதான நீதிபதிகள் சபை தலைவருமான கலாநிதி ஏ.எல். அன்சார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மகளிர் பற்றிய சட்டங்கள், குற்றங்கள், பாதிப்பு மற்றும் போதைப் பொருளால் சீரழியும் குடும்பங்கள் பற்றிய விழிப்புணர்வை காழி நீதிவானும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான எட்.எம். அன்சார் மௌலானா நிகழ்த்தினார்.

மேலும் பெண்களும், ஊடகமும் தொடர்பான விழிப்புணர்வை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பிறை வானொலி கட்டுப்பாட்டாளரும், பிரதிப்பணிப்பாளருமான வஸீர் அப்துல் கையூம் நிகழ்த்தியதுடன் கவிதாயினி மாஜிதா தௌபீக் தலைமையில் கவிதாயிணிகளின் கவியரங்கம் நடைபெற்றது. இஃப்தார் சிந்தனையை மௌலவி எம்.எல்.எம். உஸ்மான் (நூரி) வழங்கினார்.



இதில் கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணைக்குழு முன்னாள் உறுப்பினர், அல்- மீஸான் பௌண்டஷன் தவிசாளர் யூ.எல். நூருல் ஹுதா, இளைஞர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.ஜி. அன்வர், வரலாற்றாய்வாளர் ஜலீல் ஜீ, சூழலியலாளர் மின்மினி மின்ஹா உட்பட லக்ஸ்டோ அமைப்பின் நிர்வாகிகள், லக்ஸ்டோ சமூக சேவைகள் பிரிவு தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது 'சங்கமம்' நிகழ்ச்சியின் நினைவாக அதிதிகளால் மரக்கன்று நடப்பட்டது.



# சீரமைக்கப்பட்ட கழிப்பறைகள் பாடசாலையிடம் கையளிப்பு

(கேதீஸ்)

இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் நிதி அனுசரணையில் அக்கரப்பத்தனை டொரிங்டன் தமிழ் வித்தியாலய பாடசாலைக்கு உட்கட்டமைப்பு வசதிகள், குடிநீர் வசதி மற்றும் மலசல கூடங்கள் மீள புனரமைப்பு செய்யப்பட்டு மாணவர்களின் பாவணைக்காக கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் சார்பாக ஏகாம்பரம், பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள்



மற்றும் மாணவர்கள் கலந்துக்கொண்டனர்.



# சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினம்

(அஷ்ரப்கான்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் 'சர்வதேச மகளிர் தின நிகழ்வு' கல்முனை அல்-ஜலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் பொலிஸ் நிலைய பொலிஸ் சார்ஜன் எஸ்.ரி.பாறூக் தலைமை மற்றும் வழி நடத்தலில் நடைபெற்றது.

இங்கு சாய்ந்தமருது பிரதேச செயகத்திற்குட்பட்ட மகளிர் மகா சங்க உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுதீன் மற்றும் விசேட அதிதியாக பெண் பொலிஸ் உத்தியோகத்தர் சஞ்ஜீவனி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் பொலிஸ் சார்ஜன் எஸ்.ரி.மக்பூல், சாய்ந்தமருது பிரதேச செயக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.முஸ்பிறா, உளவளத்துணை உத்தியோகத்தர் எஸ்.எச்.எம்.சியாம் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.






இம்முறை 'பெண்கள் உரிமைகள் குறித்து விழிப்புடன் இருப்போம்' என்ற தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது.

இங்கு மகளிர் மகா சங்க செயலாளர் ஏ.ஜே.மர்ஜானா பெண்கள் தொடர்பான கவிதையை வாசித்தார்.

மேலும் வீட்டு வன்முறை பால்நிலை சமத்துவம் மற்றும் மகளிர் தின நிகழ்வு தொடர்பான விழிப்புணர்வு மகளிர் பற்றிய சட்டங்கள், குற்றங்கள், பாதிப்பு மற்றும் போதைப் பொருளால் சீரழியும் குடும்பங்கள் பற்றிய விழிப்புணர்வு உரை, உட்பட பல நிகழ்வுகள் இடம்பெற்றன.

# நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு கிண்ணியாவில்

(ஹலால்தீன் )

கிண்ணியாவில் நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு நேற்;று (திய்கட்கிழமை) மாலை காதரியா ஜும்மா பள்ளி வாசலில் நடைபெற்றது.

நோன்பாளிகளினதும், பிரயாணிகளினதும் நன்மை கருதி இவ் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இப்தார் நிகழ்வில் பலர் கலந்து கொண்டனர்.

இவ் இப்தார் நிகழ்வுகளுக்கான ஏற்பாட்டினை காதரியா ஜும்மா பள்ளி வாசல் நிர்வாகம் ஏற்பாடு செய்திருந்தது.



தலைவர் முகம்மது முஹ்சின், செயலாளர் பஹ்மி, உதவி தலைவர் பௌசி, பொருளாளர் நசீர் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.03.2025இல் வெளியிடப்பெற்றது